பக்கங்கள் : பன்னிரண்டு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 23 திங்கட்கிழமை (08.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 286

இடம் பெயர்ந்தோருக்கு உதவ வன்னி செல்லும்

தொண்டு அமைப்புகள் மீது கட்டுப்பாடு விதிக்கக் கூடாது என அழுத்தம் தேவை

நியூயோர்க், செப்.08

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் பொருட்டு வன்னிப்பகுதிக்குச் சென்று வரும் மனிதாபிமானத் தொண்டு அமைப்புகள் மீது இலங்கை அரசு எந்தக்கட்டுப்பாடுகளையும் விதிக்கக்கூடாது என்று மனித உரிமைக்கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

ஐ.நா.விடம் மனித உரிமைக் காப்பகம் வலியுறுத்து

இந்த விடயத்தில் அரசுக்கு உரிய அழுத்தத்தைக் கொடுக்குமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கவுன்ஸிலிடம் மனித உரிமைக் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

ஜெனீவாவில் இன்று ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 9 ஆவது கூட்டத் தொடரில் ஆராய்வதற்கென மனித உரிமைக் காப்பகம் சமர்ப்பித்துள்ள எழுத்து மூல அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் இடம்பெற்றுள்ளது.வன்னிக்கு உணவு மற்றும் சுகாதாரப் பொருள்களைக் கொண்டு செல்வதில்

(11ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியை கைப்பற்றும் படைநடவடிக்கை கடினமானது என்கிறார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய

கொழும்பு, செப்டம்பர்.8

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கு இராணுவம் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை கடினமானதே. எனினும் நாம் எப்படியாவது விடுதலைப் புலிகளின் 'தலைநகரை'க் கைப்பற்றியே தீருவோம். அதற்கு கால வரையறை நிர்ணயிக்கமுடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அடுத்து அதிகாரம் மிக்க அவரது சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ.

கொழும்பில் இருந்து வெளிவரும் ''திவயின'' பத்திரிகையின் ஞாயிறு வார இதழுக்கு அளித்த செவ்வியிலேயே கோத்தபாய மேற்கண்டாவறு கூறியுள்ளார்.

அவர் அச்செவ்வியில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

குறித்த இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு மேலாகி விட்டது. எமது முதல் குறிக்கோளாக இருந்தது புலிகளின் வளங்களை அழிக்க வேண்டும் என்பதாகும். மன்னாரில் இருந்து ஆரம்பமாகி அவர்களின் வளங்களையே அழித்து வந்தோம். கடற்புலிகளின் வளங்களை எமது கடற்படையினர் வெற்றிகரமாக அழித்தனர். அத்துடன் அவர்கள் ஆயுதங்களை கொண்டு வந்த பாதைகளை தடைசெய்தோம். அவ்வாறான சில இடங்கள் இன்னமும் இருப்பதை நாம் அறிவோம். யுத்தத்தினால் கிளிநொச்சியில் உள்ள மக்களுக்கு உயிராபத்து ஏற்படாது. யாழ்ப்பாணத்தை

(12ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப்புலிகள் என நினைத்து

படையினரின் இரு அணிகள் மட்டு. எல்லையில் மோதல்?

மட்டக்களப்பு, செப். 08

மட்டக்களப்பு, கோரளைப்பற்று வடமுனைக் கிராமத்தில் விடுதலைப்புலிகளைத் தேடியழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட படைத்தரப்பின் இரு அணியினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் நான்கு இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட படைத்தரப்பின்

(12ஆம் பக்கம் பார்க்க)

பலாலியில் அமைக்கப்பட்டுள்ள படையினரின் நினைவுச் சின்னம்.

யாழ்.பாதுகாப்பு நிலைவரத்தைக் கண்டறிய இராணுவத்தளபதி சனியன்று பலாலி விஜயம்

யாழ்ப்பாணம், செப். 08

குடாநாட்டில் பாதுகாப்பு நிலைவரம் குறித்து களத் தளபதிகளுடன் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் பலாலியில் விரிவாக ஆராய்ந்தார்.

பலாலி வந்தடைந்த தளபதியை யாழ்.மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வரவேற்றார்.

குடாநாட்டில் நிலை கொண்டுள்ள 51, 52, 55 ஆவது படையணிகளின் தளபதிகள், சிரேஸ்ட இராணுவ அதிகாரிகள், பிரிவுத் தளபதிகள் ஆகியோருடன் தனித்தனியே கலந்துரையாடி பாதுகாப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

கோப்பாய் தெற்கில் பாழடைந்த வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, செப்.8

கோப்பாய் தெற்குப் பகுதியில் பாழடைந்த வீடு ஒன்றில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு ஆயுத தளபாடங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இரகசியத் தகவல் ஒன்றின் பேரில்,

(12ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு எதிரான யுத்தத்தை இந்தியா ஒருபோதும் தடுக்காது!

உறுதியாக நம்புகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, செப். 08

புலிகளுக்கு எதிராக அரசினால் நடத்தப்படும் யுத்தத்தைத் தடுத்து நிறுத்த இந்தியா ஒருபோதும் முன்வராது என்று விமல்வீரவன்ஸ எம்.பி. நேற்றுக் கூறினார்.

யார் எந்த அழுத்தத்தை மேற்கொண்டாலும் இந்தியா அந்தத் தப்பைச் செய்ய முன்வராது என்று தாம் உறுதியாக நம்புகிறார் என்றும் விமல் கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

அரியாலை முன்னரங்கில் சனிக்கிழமை மோதல்

கொழும்பு, செப்.8

அரியாலை முன்னரங்க நிலைகளில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது என்று படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இந்த மோதலில் இரு படையினர் காயமடைந்தனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 9 ஆவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

ஆனால் இலங்கை அமைச்சர் அதில் கலந்து கொள்ளாமல் திரும்பிவிட்டார்!

ஜெனிவா, செப்.8

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒன்பதாவது அமர்வு இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகிறது.

இந்த அமர்வில் இலங்கையின் சார்பில் மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் கலாநிதி ரஜீவ விஜயசிங்க கலந்து கொள்கிறார்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுவே இந்த அமர்வில் கலந்து கொள்வதற்காக ஜெனிவா சென்றிருந்தது. ஐ.நாவின் உயர்மட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகளின் பயிற்சித் தளங்கள் மீது நேற்று 3 இடங்களில் விமானத்தாக்குதலாம்

கொழும்பு, செப்.08

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகள் மீது நேற்று விமானப் படையினரின் 'ஜெற்' மற்றும் எம்.ஐ. 24 ரக ஹெலிகொப்டர்கள் மூன்று தடவைகள் தாக்குதல்களை நடத்தின.

கிளிநொச்சி, பூநகரி, கௌதாரிமுனைப் பகுதியில் உள்ள கடற்புலிகளின் 'கடற்தளம்' மீதே நேற்று அதிகாலை 4.15 மணியளவில் விமானப்படையினரின் எம்.ஐ. 24 ரக ஹெலிகொப்டர்கள் தாக்குதல்களை நடத்தின என்று படைத்தரப்பில் கூறப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய மட்டத்திலான உதைபந்தாட்டம்; மானிப்பாய் இந்து 3ஆம் இடத்தை தட்டிக் கொண்டது

நீர்கொழும்பு, செப்.8

நீர்கொழும்பில் நேற்று இடம்பெற்ற தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 17 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

நீண்ட இடைவெளியின் பின்னர் யாழ். மாவட்ட அணி ஒன்று தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களில் ஒன்றை இம்முறை கைப்பற்றியுள்ளது.

நீர்கொழும்பு மேயர் ராஜ் மைதானத்தில் சனிக்கிழமை தொடக்கம் இடம்பெற்ற சுற்றுப் போட்டியில் அரையிறுதி வரை முன்னேறிய மானிப்பாய் இந்து தன்னுடன் மோதிய கிண்ணிய ம.வி. அணியை ஆட்டத்தை சமப்படுத்தியது.

எனினும், தண்டனை உதைப்பில் 3-2 கோல் கணக்கில் இறுதியாட்டத்துக்குச் செல்லும் வாய்ப்பை இழந்தது.

அதன் பின்னர் ஊவா மகா வித்தியாலயத்துடன் மோதிய மானிப்பாய் இந்து விறுவிறுப்பாக ஆடி 2-1 கோல் கணக்கில் வென்று 3ஆம் இடத்தைத் தட்டிக்கொண்டது.

நேற்று இடம்பெற்ற வலைப் பந்தாட்டம், கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ். அணிகள் அரையிறுதியுடன் விடைபெற்றன. (அ-1)

புத்தாக்கக் கண்காட்சியும் விருது வழங்கும் நிகழ்வும்

யாழ்ப்பாணம், செப்.8

இலங்கை புத்தாக்க ஆணைக்குழு நடத்தும் புத்தாக்கக் கண்காட்சியும் விருது வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளன.

வலயமட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் புத்தாக்கங்களும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகிய வற்றின் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் புத்தாக்கங்களும் தனிப்பட்டவர்களின் புத்தாக்கங்களும் இக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கான நேர ஒழுங்குகள் வலய ரீதியாக அறிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 16 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் ஒரு மணிவரை யாழ்ப்பாண வலய மாணவர்களும் -

பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 4 மணி வரை வலிகாமம் வலய மாணவர்களும் கண்காட்சியைப் பார்வையிடலாம்.

எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை தென்மராட்சி வலய மாணவர்களும் -

முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை வடமராட்சி வலய மாணவர்களும் -

நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை தீவக வலய மாணவர்களும் - கண்காட்சியைப் பார்வையிடலாம்.

கண்காட்சியில் தமது புத்தாக்கங்களையும் காட்சிப்படுத்த ஏற்கனவே பதிவு செய்தவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை தத்தமது காட்சிப் பொருளுடன் வேம்படி மகளிர் கல்லூரிக்கு சமுகம் தருமாறு யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல் துறைத் தலைவர் கலாநிதி ந.சிவயோகன் கேட்டுள்ளார். (1-202)

வலி.கிழக்கில் மண் அகழ்வுக்கு தடை

கோப்பாய், செப்.8

வலி.கிழக்கு பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் மற்றும் கல் அகழ்வதற்கு முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த விவரங்கள் கடந்தவாரம் நடைபெற்ற பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஆராய்ந்து பிரதேச நலன்விரும்பிகளின் வேண்டுகோளிற்கிணங்க மேற்படி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல், மண் அகழ்வோர் உரிய அனுமதியை பிரதேச செயலகத்தில் பெறுவதன் மூலம் மேற்கொள்ளலாம் எனவும், இதன் மூலம் சூழலின் இயற்கைத் தன்மை பாதிக்கப்படாமல் பாதுகாக்கலாமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-72)

கோப்பாய் மருந்தகத்தில் மருத்துவர் இல்லாததால் நோயாளர் சிரமம்

கோப்பாய், செப்.8

கோப்பாய் பிரதேச மருத்துவ மனையில் வைத்தியர்கள் சிலர் விடுமுறையில் சென்றுள்ளதால் மருத்துவர் பற்றாக்குறையால் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் சிரமத்தை எதிர்கொள்வதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளையில் 'கிளினிக்'கில் வழங்கப்படும் நீரிழிவு நோய்க்கான மருந்துகள் உட்பட சில மருந்துகள் முடிவடைந்துள்ளதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (1-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய அஞ்சலிகள்

மாவிட்டபுரம், வீமன்காமத்தைப் பிறந்தகமாகவும் கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்டு கொட்டாஞ்சேனை வரதராஜவிநாயகர் ஆலய அறங்காவலராகவும் தர்மசிந்தையாளராகவும் விளங்கிய

பொன்னம்பலம் பாலசுந்தரம்

ஆஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையுடைகிறோம்.

அன்னாருக்கு எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிப்பதுடன் அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

நிர்வாக சபையினர்,
சிவபூமி மனவிருத்திப் பாடசாலை,
சிவபூமி முதியோர் இல்லம்.

கண்ணீரில் நாமிங்கு....

அமரர் முருகன் மகாலிங்கம்

(முன்னாள் லிகிதர், கிளிநொச்சி M.O.H (கிளாக்))

அறுபதாண்டு காலப் பகுதியது....!
ஆரம்ப செயலாளராக
விளையாட்டு வீரனாக!
நடை போட்ட காலமது!
எங்கள் கழகமது உம்
நினைவோடு தொடருமிங்கே.

கடந்த 24.08.2008 அன்று லண்டனில் காலமான முருகன் மகாலிங்கம் அவர்களின் பிரிவுத்துயரில் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் உதிர உறவுகளுக்கும் எமது கழகத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். (78266)

ஸ்ரீ விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம்
(மகாத்மாஜீ சனசமூக நிலையம், மகாத்மா காந்தி சனசமூகநிலையம், அறிவொளி சனசமூகநிலையம்).

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

மரண அறிவித்தல்

திருமதி செல்லையா நல்லம்மா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா நல்லம்மா நேற்று (07.09.2008) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க.செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - ராசம்மாவின் மருமகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கண்ணாத்தையின் அன்பு மகளும், தவபாலசுந்தரம் (பொறியியலாளர், U.K), புஸ்பகாந்தி (கந்தர்மடம்), சூரியகுமாரன் (சுபா சென்ரர், கொக்குவில்), சூரியகுமாரி (கனடா), பூரணச்செல்வி (உப அஞ்சல் அதிபர், நீராவியடி), ஞானரூபி (கனடா), முருகேஸ்வரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி (U.K), காலஞ்சென்ற குகநாதன் (தவம் - கந்தர்மடம்), புஸ்பா (நல்லூர்), கெங்காதரமூர்த்தி (கனடா), தேவராஜா (சுண்டுக்குளி அஞ்சலகம்), கணேசநாதன் (கனடா), ஜெயலஷ்மி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியும், Dr.சிவானி, Dr.சுந்தர், சேகர், சுதாகர், ஜயந்தன், நித்தியா, பிரபாகரன் (கணனி உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), சுபநேமி, சுபராமி, றஸ்மன், சங்கீதா, ஜனனி, தாரணி, சுஜனிகா, சிந்துஜா, சிந்துஜன், தயாபரன், மாதங்கி, மதுவந்தி, சரண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது கொக்குவில் இல்லத்தில் இன்று (08.09.2008) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
சூரியகுமாரன் (மகன் - சுபா சென்ரர், கொக்குவில்)

பாதிரி கோயிலடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (78273)

மரண அறிவித்தல்கள்

திருமதி பத்மாதேவி கந்தமூர்த்தி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாதேவி கந்த மூர்த்தி (04.09.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கந்தமூர்த்தியின் அன்பு மனைவியும் கந்தசாமி, பரந்தாமன், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, கிருஸ்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுரேசாவின் அன்புத் தாயாரும் கிருசாந்தின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.09.2008) ஞாயிற்றுக்கிழமை இல 152/5, பிராஸ்சிஸ் வீதி, கொழும்பு 6 இல் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (78267)

வளாகவீதி, திருநெல்வேலி.
தொ.பே. 02-14590887
கொழும்பு:- 0112554403

தகவல்:
சகோதரர்கள் -
க.கந்தசாமி, க.பரந்தாமன்.

திருமதி பரமசிங்கம் ஜெயபத்மினிதேவி

மருதனார்மடம், உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமசிங்கம் ஜெயபத்மினிதேவி (தேவி அக்கா) 07.09.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை பரமசிங்கம் (ஓய்வுபெற்ற மருந்தாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயக்குமார், மற்றும் ஜெயந்தி(ஆசிரியர் கலாசாலை, பலாலி) அவர்களின் அன்புத் தாயாரும், ச.ஞானகுமார் (சுரேஸ் - வலிதெற்கு பிரதேச சபை, சுன்னாகம்) அவர்களின் அன்பு மாமியாரும், கரிஷனின் அன்புப் பேர்த்தியும், சத்திய பாலன் (கொழும்பு), சத்தியானந்தன் (கனடா), சக்திவேல், ஜெயராம்பரைலக்ஷ்மிதேவி (ஜெயா), ஜெயசந்திரவதனி, லீலாவதி (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் மதிவதனசோதி (கொழும்பு), நேசதுரை, சிவமலர், விக்ரமசிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற கணேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2008) திங்கட்கிழமை பி.ப 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (78272)

"ஈஸ்வரபதி",
உடுவில் வீதி,
மருதனார் மடம், சுன்னாகம்.

தகவல்:
வே.பரமசிங்கம்
(ஓய்வு பெற்ற மருந்தாளர்).

திருமதி சண்முகராஜா அன்னலட்சுமி

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராஜா அன்னலட்சுமி நேற்று (07.09.2008) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை சண்முகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்புத் தங்கையும், இலகுநாதன் (Ken Travels) தயாநிதி, வாமதேவன் (அதிபர், யா/கோண்டாவில் இராமகிருஸ்ணா மகாவித்தியாலயம்), ஸ்ரீனிவாசன் (பிரான்ஸ்), நளாயினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வேதாட்சனநாயகி, காலஞ்சென்ற சிவகடாட்சம் மற்றும் நகுலேஸ்வரி, யசோதா (பிரான்ஸ்), ரவிக்குமார்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வாசுகி (பிரான்ஸ்), கபிலேந்திரன் (பிரான்ஸ்), பாரதிதாசன், காலஞ்சென்ற கீர்த்தனா, காலஞ்சென்ற கௌதமன் மற்றும் நிலக்ஷி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), காயத்திரி (லண்டன்), முகேஷ்குமார் (லண்டன்), சஜீவ் (லண்டன்), டில்சான் (பிரான்ஸ்), நிரோஷியா (பிரான்ஸ்), மிஷாரிகா (பிரான்ஸ்), டினுசிகா(பிரான்ஸ்), எழிலரசன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மீரா, சூர்யா, சஞ்சய் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

109, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (78270)

தகவல்:
சன். வாமதேவன்(மகன்)
(அதிபர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்).

சாமுவேல் இராயப்பு (அரசு)

(முன்னாள் மாநகரசபை ஊழியர்)

இல. 10, கோயில் வீதி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் இராயப்பு (அரசு) நேற்று (07.09.2008) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தோமஸ் சாமுவேல் (TOM)- எலிசபேத் ஆகி யோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - புலோமினா தம்பதியினரின் அன்பு மருமகனும் மேரி ஜெயமணி யின் அன்புக் கணவரும், நந்தனா (வெனிற்றா - பிரான்ஸ்), எட்மன் யூட் (கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம், வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேஸ் மில்றோய் (பிரான்ஸ்), ஜெயரஞ்சித மலர் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மரியதாஸ் (வெள்ளவத்தை) அவர்களின் மைத்துனரும், காலஞ் சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, அலோசியஸ், சென்யோண் மற்றும் றீற்றம்மா (வவுனியா), ஆசீர்வாதம் (லண்டன்), பிரான்சிஸ் சேவியர், விஜயன், அன்பு (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அல்சிகா (பிரான்ஸ்), யோயிந்தன் (பிரான்ஸ்), பாவின்தன் (பிரான்ஸ்), மிலானி (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.09.2008) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு புனித யுவானியர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 10, கோயில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (78268)

தகவல்:
மேரி ஜெயமணி (மனைவி), யூட் (மகன்).

மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டியில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு 10 இடங்கள்

யாழ்ப்பாணம், செப்.8

மாகாண மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த் தினப்போட்டிகளில் முதல்இடங்களைப்பெற்ற யாழ். மாவட்டப் பாடசாலைகளின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இப்பாடசாலைகள் தேசிய மட்டத்தில் இடம்பெறவுள்ள போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

எழுத்தாக்கம், விவாதம், வினாவிடை போன்ற பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

வெற்றி பெற்ற மாணவர்கள் பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

*சுருக்கம் - எழுத்து - முதற்பிரிவு - சு.சுபநிலா - ஜோன்.பொஸ்கோ.

*கட்டுரை வரைதல் - இரண்டாம் பிரிவு-ப.கதிர்தர்சினி -வேம்படி மகளிர் கல்லூரி,

*கட்டுரை வரைதல் - நான்காம்பிரிவு-மு.தர்ஷனா மகாஜனாக் கல்லூரி.

*இலக்கணப் போட்டி - நான்காம் பிரிவு-சு.அனுஷா-வடஇந்து மகளிர் கல்லூரி.

*திறனாய்வுப் போட்டி - ஐந்தாம் பிரிவு-பு.ஜீவனா - கரவெட்டி விக்னேஸ்வரா.

*குறுநாடகம் -ஐந்தாம்பிரிவு - க.ஜெயந்தினி - ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

*கவிதை எழுதுதல் - நான்காம்பிரிவு-க.பிரசாந் -ஹாட்லிக் கல்லூரி.

*சிறுகதையாக்கம் - நான்காம் பிரிவு - ஏ.கஜானனி -சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

*விவாதம் - திறந்த போட்டி- வ.நிரோசன் -யாழ். மத்திய கல்லூரி.

*தமிழ்அறிவுவினாவிடை-ஜெ.அக்ஷனா-விக்னேஸ்வரா வித்தியாலயம். (203)

வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.8

திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்களை அடுத்தமாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவர்கள் ஊடாக 'பரீட்சை ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடும் சேவையும், இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல.07, பெலவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

வடமராட்சி கிழக்கு கிராம சேவை அதிகாரிகளிடையேயான போட்டி: பொற்பதிக் கிராமத்துக்கு முதலிடம்

மந்திகை,செப்.8

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம சேவை அலுவலர் பிரிவுகளிடையே நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் பொற்பதி கிராம உத்தியோகத்தர் பிரிவு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்பிரிவு கிராம உத்தியோகத்தராக எஸ்.சச்சிதானந்தன் பணியாற்றி வருகின்றார்.

குடத்தனை, கரையூர் கிராம உத்தியோத்தர் பிரிவு இரண்டாம் இடத்தைப் பெற்றது. இப்பிரிவு கிராம உத்தியோகத்தராக எஸ். பாலசுந்தரம் பணியாற்றி வருகின்றார்.

அம்பன் கிராம உத்தியோகத்தர் பிரிவு மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. இப் பிரிவு கிராம உத்தியோகத்தராக எஸ். வித்தியாபதி பணியாற்றி வருகிறார்.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

பாரம்பரியக் கலைகள் வலுவிழந்து போகாமல் நிலைநிறுத்த கலைவிழாக்கள் உதவுகின்றன

கோட்டக் கல்விப் பணிப்பாளர் கருத்து

சங்கானை, செப்.8

எமது பாரம்பரியக் கலைகளை வலுவிழந்து போகாமல் நிலைநிறுத்துவதற்கு கலாச்சாரப் பேரவைகள் முன்னெடுக்கும் கலை விழாக்கள் உதவுகின்றன.

சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரைஎங்கரசு இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச கலை இலக்கிய விழா நேற்று நடைபெற்றது.இவ் விழாவில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்துகையிலேயே கோட்டக் கல்விப் பணிப்பாளர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பரதம், ஓவியம், சங்கீதம், நடனம், நாடங்கள் வலுவிழந்து போகின்ற இக்கட்டான சூழ்நிலையிலே பிரதேச செயலகங்கள், கலாசாரப் பேரவை என்பவை இவற்றை நிலை நிறுத்த இத்தகைய கலை விழாவை எடுத்து வருவது எமக்கு பேராறுதலைத் தருகின்றது. கலை இலக்கியங்கள் அழியாமல் பாதுகாப்பதற்கு இத்தகைய விழாக்கள் அவசியம் தேவை.

ஒவ்வோர் பிரதேசத்திலும் வாழ்கின்ற கலைஞர்களை கௌரவித்து, கலை இலக்கிய பொக்கிசங்களை வெளிக் கொணர்ந்து அவற்றுக்கு மெருகூட்டி வைக்கும் இவ்விழா கலைஞர்களுக்கு அவர் களுக்குரிய கௌரவத்தையும் மதிப்பதை யும் பெற்றுக்கொடுக்கின்றன.

நாங்கள்இன்று 25 வருடங்களுக்கு மேலாக ஒரு போராட்ட சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றோம். இந்த போராட்ட சூழ்நிலை யில் வெற்றி தோல்வி என்பதை விட எமது இயல்பு வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நிலையில் மக்கள் வாழ்ந்து வருகின் றனர். உதாரணமாக கல்வித்துறை பல சிக் கல்களை எதிர்நோக்கிச் செல்கின்றது. ஒரு பொதுவான தன்மையை கல்வித்துறையில் எட்டமுடியாது உள்ளது.

அதேபோல அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை அம்சங்களை நாம் சீராகப் பெற முடியாதுள்ளது. மனித விழுமியங்களை பாதுகாக்க முடியாதுள்ளது. கலை இலக் கியங்களை, தமது விருப்பங்களை வெளிப் படுத்த முடியாதுள்ளது. இத்தகைய விழாக் கள் அவற்றை மறைப்பதற்கு உதவு கின்றன- என்றார். (203-29)

குடாநாட்டில் நெற்செய்கையை மேம்படுத்த நல்லின விதை, உரம் ஐ.நாவினால் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.8

யாழ்.மாவட்டத்தில் உணவு உற்பத்தியையும் உணவுப் பாதுகாப்பையும் மேம்படுத்தும் நோக்குடன் உயர் விளைச்சல் தரக்கூடிய 50 மெற்றிக்தொன் விதை நெல்லை ஐ.நா.உணவு, விவசாய நிறுவனம் தென்பகுதியில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வந்துள்ளது.

நலிவுற்ற விவசாயிகளுக்கு இந்த விதை நெல் பங்கிட்டு வழங்கப்படவிருக்கின்றது.

ஏரி 353, ஏரி 303, ஏரி 402, பிடபிள்யூ 351, பிடபிள்யூ 361, பிஜி 406, பி.ஜி 250 ஆகிய விதை இனங்களே எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றுடன் யூரியா, பொட்டாஸ், அடிஉரம் போன்ற உர வகைகளும் கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் அவையும் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியை உறுதிசெய்தல், வாழ்வாதாரச் செயற்பாட்டை மேம்படுத்தல் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு விவசாயத் திணைக்களத்தின் ஊடாக இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட விருக்கிறது.

(1-203)

களவு, கசிப்பு உற்பத்தியைத் தடுக்க புன்னாலைக் கட்டுவனில் விழிப்புக்குழுக்கள்

புன்னாலைக்கட்டுவன், செப்.7

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தில் உள்ள ஜே/208 மற்றும் ஜே/209 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் அண்மையில் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினரின் அறிவுறுத்தலுக்கு அமைவாகக் கிராம சேவையாளர்களினால் நடைமுறைப் படுத்தப்படும் இவ் விழிப்புக்குழுக்களின் அங்கம் வகிக்கும் பொதுமக்கள்; இரவு ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வரும் நேரம் தொடக்கம் மறுநாள் அதிகாலை தளர்த்தப்படும் நேரம் வரை தத்தமது பிரதேசங்களில் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மத்தாளோடை, ஈவினை கலையரசி கிராமம், திடற்புலம் ஆகிய கிராமங்கள் அடங்கலாக இவ் விழிப்புக்குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையால் மேற்படி பிரதேசத்தில் களவு மற்றும் கசிப்பு உற்பத்தி போன்ற சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நிகழ்வுகள் குறைந்து வருவதாக இப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (1-150)

சமய சந்நிதிகளிலே

வடமராட்சி,செப்.8

தென்புலோலி, காந்தியூர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள இத்திருவிழாவில் எதிர்வரும் 16 ஆம் திகதி சங்காபிஷேகம் இடம்பெறும். (202-236)

* * *

யாழ்ப்பாணம்,செப்.8

ஆனைக்கோட்டை,உயரப்புலம் புனித அடைக்கலமாதா ஆலயத் திருவிழாத் திருப்பலி இன்று காலை 6 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,செப்.8

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தோர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். சிவஸ்ரீ குமார சரவண பவக் குருக்கள் கிரியைகளை மேற்கொள்வார். (203)

* * *

கோப்பாய்,செப்.8

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின் றது. எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-72)

* * *

நவாலி,செப்.8

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றது.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-100)

* * *

நவாலி,செப்.8

ஆனைக்கோட்டை வரதவிக்ன விநாயகர் ஆலயப் பெருந்திருவிழாகடந்த சனிக் கிழமை ஆரம்பமாகிநடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் (203-100)

* * *

யாழ்ப்பாணம்,செப்.8

நாரந்தனை, பண்டாரபுலம் தான்தோன்றி மனோன்மணி அம்மன் ஆலயப் பெருந் திரு விழா கடந்த வெள்ளிக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த் திரு விழாவும் மறுநாள் சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறும்

சிவஸ்ரீ நவரத்தினபிரபுதேவக் குருக்கள் கிரியைகளை மேற்கொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம்,செப்.8

வண்ணை அரசடி விநாயகர் ஆலய அலங்காரத்திருவிழா கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 11ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் சங்காபிசேகமும் இடம் பெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை மாலை திருவூஞ்சல் இடம்பெற்று பூந்தண்டிகையில் சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறும். (203)

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள்.விருந்தினர்கள் மேடைக்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யுனிசெவ் நிறுவன அதிகாரி டயானி அரகி பாடசாலையின் புதிய கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன், வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு தண்டபாணி தேசிக குருக்கள் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

யுனிசெவ் நிறுவன அதிகாரி கரிஸ்நோபல், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோருக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்படுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பகுதி முருகன் ஆல யத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சித்திரத் திருமஞ்சத் தின் வெள்ளோட்டநிகழ்வுகடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: லக்ஷ்மன்)

மீளாய்வுக் கூட்டம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்டம் -2008 மீளாய்வுக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் தலை மையில் கூட்டம்மாநாட்டுமண்டபத்தில்நடைபெறும் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் மற்றும் அரச திணைக்களத் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைக்கப் பட்டுள்ளனர். (203-95-51)

'கலாவதி' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.8

பலாலி ஆசிரியர்கலாசாலையின் 'கலாவதி' புத்தக வெளியீடு நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நாவலர் கலா சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ. பிறேம் சங்கர் தம்பதியர் கலந்து கொள்வர்.

இசை நிகழ்வு, பட்டிமன்றம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (202)

சின்ன வெங்காய விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் சின்ன வெங்காயத்தை விட பெரியவெங்காயத்தின் (பம்பாய்) விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. திருநெல் வேலி மரக்கறிச் சந்தையில் சின்ன வெங்காயம் கிலோ 50 தொடக்கம் 70 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் பெரிய வெங்காயம் கிலோ 30 தொடக்கம் 40 ரூபா விற்பனை செய்யப்படுகின்றது. (51)

சமுக வலுவூட்டாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் அதிகரிப்பு

மானிப்பாய், செப்.8

மீள் எழுச்சித்திட்ட சமுக வலுவூட்டாளர் பதவிக்கு திணைக்களங்கள் மற்றும் அமைச் சுக்களில் பணியாற்றும் நிகழ்ச்சித்திட்ட அலுவ லர்கள் ஆர்வத்துடன்விண்ணப் பித்துவருகின்றனர்.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல் லைத்தீவு, வவுனியா ஆகிய பகுதிகளில் மீள் எழுச்சி திட்டங்கள் விரைவில் முன்னகர்த் தப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக மீள் எழுச்சி திட்ட சமுக வலுவூட்டாளர்கள் 5 மாவட்டங்களி லும் நியமிக்கப்படவுள்ளனர்.

விண்ணப்பங்களை அனுப்புவோர் அதற்கென உரித்தான படிவத்தில் திணைக் களத் தலைவர் ஊடாக பிரதி திட்டப் பணிப் பாளர், மீள் எழுச்சி திட்டம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் இ. இர வீந்திரன் கேட்டுள்ளார். (203-95)

விண்ணக வாழ்வில் ஈராண்டு நிறைவு

தோற்றம்
14 . 04 . 1931

மறைவு
08 . 09 . 2006

திருமதி வெண்டக்கோன் இராசமலர்

பாரினுக்கோர் பாசமலரே
எமை ஒளிர வைத்த
குடும்ப ஞான தீபமே
எமை ஆண்டருளிய
அம்மா இராசமலரே
ஈராண்டு சென்றாலும்
எம் இதயத்தில்
நிறைந்து இருக்கின்றீரே.

தங்கள் நினைவில் நிறைந்த:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்

கொழும்பு -10.

மரண அறிவித்தல்

திருமதி பொன்மணி பாலசிங்கம்

(சித்தன்கேணி)

சங்கரத்தையைப் பிறப்பிடமாவும், கீரிமலை வீதி, சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மணி பாலசிங்கம் நேற்று (07.09.2008) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், நித்திய சிங் கம், உதயசிங்கம்(பிரான்ஸ்), பரராசசிங்கம்(இத்தாலி), ललிதாராணி, சுதாராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் நிரோஜினி, நிமல சிங்கம், நிசானி, நிதூஷன், வதனா, கஜிவினி, பிரின்சிகா ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.09.2008) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிமலை வீதி, சித்தன்கேணி. (கி/554533)

தகவல்: குடும்பத்தினர்.

நான்காம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
சுப்பையா சுபேந்திரன்

நிதி: வளர்பிறை நவமி 08.09.2008

தாயின் மடியில்
பூவாக
02.03.1973

நோயின் கொடுரப்
பிடியின் சருகாக
24.08.2004

நல்லுயர் பேறே நாளும் நவில் சுபேந்திரன்
நற்செல்வா செல்லுயர் காலந்தானோ
சென்று நான்காண்டு மாச்சோ வெல்லுயர்
வினைகள் செய்து விலகியே போனபோதும்
பல்லுயர் பண்பும் பேச்சும்
பசுமையாய் நெஞ்சில் உண்டு.

"மிஷாந்த மகால்",
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (77738)

குடும்பத்தினர்

49 ஆவது அகவையில்

உள்ளத்தை உருக்கும் நினைவுகளோடு நிலை தளர்ந்த ஐந்தாம் ஆண்டுநினைவஞ்சலி

வித்தாக தாயின்
மடியில்
03.04.1959

விதியின் சதியால்
ஆண்டவன் அடியில்
03.09.2003

அமரர் வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்

திதி: பூர்வ பக்க அட்டமி
08.09.2008

ஐந்து வருடங்கள் ஆனதய்யா...! எங்களின் வானம் இருண்டு -போனதய்யா...!
நெருப்பு நெஞ்சில் எரியுதய்யா விழி நீரும் அதனால் -சுடுகுதய்யா...!
கிரக்கு இனிமேல் வெறுத்தீடுமா? உங்கள் உருவம் கண்ணில் தெரிந்திடுமா?
நாங்கள் கூட நடைப்பிணம்தான் உம் நினைவை சுமந்து வாழ்கின்றோம்...
மரணம் உம்மை கொண்டு சென்றதாலே சோடுத் சோட்டாய் நாம் தினமும் சாகிறோம்...
கண்ணீரில் நாங்கள் விளக்கெரிக்கிறோம் கவலை நோயால் தினமும் தவிக்கின்றோம்...
நீர் நட்ட விதைகள் நான்தும் நந்தவனமாய் பூத்திருக்கும் அழகைக்காண -நீர் இல்லை
தந்தை உம்மைக் காணாது எங்களின் இதயங்கள் ஒப்பாரி படிக்குதய்யா ஓயாமல் தவிக்குதய்யா.!
விலையில்லா அன்பாலாம் எனதுயிரா அவர் அன்பு முகம் காணுவரோ- நான் வாங்கவில்லை
வாடகைக்கு வாழும் இந்த பூமி விட்டு நாம் வருவோம் மக்களுக்கும் இடம் போதுமய்யா...
கடவுள் எமக்கு கடன்காரன் உங்கள் உயிரை வாங்கிச் சென்றதாலே...
திருப்பிக் கொடுக்க மனமும் இல்லை அந்த திருடன் கண்ணில் படவில்லை..
அவனே கொடுத்தான் அவனே எடுத்தான் அழுவதைத் தவிர வழியும் இல்லை.

அப்பா உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டி அல்லும் பகலும் வெங்கடேஸ்வரப்பெருமாள் பாதத்தை வேண்டி நிற்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
அன்பு மனைவி
அருமைப் பிள்ளைகள்,
ஆசை மருமகன்.

374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கண்ணீர் அஞ்சலி

எமது சக தோழி

அ.சிறீசுதா

(நல்லூர் ப.நோ.கூ.சங்கக் கிளை - முகாமையாளர்)

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி இளையம்மா இரத்தினம்

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கிளை - நல்லூர் ப.நோ. கூ.சங்கம்.

"ஓம் வீராட் விஸ்வப் பிரம்மவே நமஹ"

18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
07 . 02 . 1947

விண்ணில்
29 . 08 . 1990

திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு

திதி: 08.09.2008 நவமி

சிந்து பாடிய பூங்குயிலானவள்
சிறகடித்து பறந்து போய் இன்று
பதினெட்டு ஆண்டுகள் ஆனபோதிலும்
அவனிமீதிலே உன் நினைவு ஆடுது
வெந்துயரிலே வாழும் கணவனும்
வேரிழந்து வாழும் பிள்ளைகள் யாவரும்-உனை
சிந்தை மீதிலே என்றும் போற்றுவோம்.

103/4, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (77735)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது உறுதிமிக்க போராளிகளை புலிகள் களத்தில் இறக்கியுள்ளனர்

'சண்டேரைம்ஸ்' பத்திரிகையில் களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 07.09.2008 அன்று எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

கடந்தவாரம் திங்கள்-செவ்வாய்க்கிழமைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளும் அரச படையினரும் சமீபகாலத்தில் இல்லாத வகையில் கடும் மோதல்களில் ஈடுபட்டிருந்தனர். 4 ஆவது ஈழப்போரின் மிக முக்கியமான கட்டங்கள் கடந்த வாரம் நிறைவேறியுள்ளன.

வன்னியின் மேற்குப்பகுதியில் மிக மோசமான மோதல்கள் இடம்பெற்றிருந்தன. மன்னாரின் வடக்கு கிழக்கில் மிகத் தூரமான பகுதிகளில் விஸ்தாரணமான

மல்லாவியில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் முன் இராணுவத்தினர் நிற்கும் காட்சி- *இராணுவத்தினர் வெளியிட்ட படம்.*

பகுதிகளை கடந்த சில மாதங்களில் படையினர் கைப்பற்றி இருந்தனர். தற்பொழுது புலிகளின் மிகப்பலம் வாய்ந்த பகுதியின் வாயிலில் படைகள் நிலை கொண்டுள்ளன. இன்று இரண்டு முனைகளில் கடும் எதிர்ப்பினை அவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இதில் ஒருபிரிவு நாச்சிக்குடாவுக்கு தெற்கில் பலம் வாய்ந்த புலிகளின் அரண் ஒன்றை ஊடறுக்க முயலும் இராணுவத்தின் முதலாவது செயலணியின் ஒரு பிரிவாகும். இப்பகுதி கடந்த காலத்தில் கடற்புலிகளின் முக்கிய தளமாக விளங்கியிருந்தது.

படையணிகளின் வருகைக்கு முன்பே கொண்டு வந்துவிடும். இங்குதான் முன்னொருபோது சங்குபிட்டிக்கும் கேரதீவுக்கும் பாதைப் படகு சேவையொன்று இடம்பெற்று வந்தது. பலவருடங்களுக்கு முன்னர் இது தான் இலங்கை பெருநிலத்துக்கும் யாழ்ப் பாணத்துக்குமிடையில் பிரபல்யமான போக்குவரத்துச் சேவையாக இருந்துள் ளது. இப்பகுதி கைப்பற்றப்பட்டதை யடுத்து மன்னாரிலிருந்து யாழ். குடாநாடு முழு மைக்குமான தரை வழிப்பாதையை இரா ணுவக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுவிட்டதைக் குறிக்கும்.

அதனால்தான் இப்பகுதியில் இராணுவத் தின் முன்நகர்வை புலிகள் கடுமையாக எதிர்த்து வந்துள்ளனர். இப்பகுதி மோதல் களில் பலர் உயிர் துறப்பதற்கும் இராணுவ கனரக தளபாடங்களை இழப்பதற்கும் கார ணமாகியுள்ளது.

அடுத்த சில நாள் களில் வடகிழக்கு பருவக்காற்று உச்சக் கட்டத்தை அடைந்து விடும் என்பதால் இப் பகுதியில் போராட் டம் மிகக் கஷ்டமான தாக அமைந்து விடும் என்று கருதப்படுகின் றது.

இப்பகுதியில் மல் லாவியும் துணுக்கா யும் அரச படைகளி டம் வீழ்ச்சியுற்றமை மேலும் சில வெற் றிகளாகக் கருதப்படுகின்றது. 1996 இல் இருந்து 1998 வரை மல்லாவியும் அதன் சுற் றுவட்டமும் துணுக்காய் உட்பட புலி களின் இராணுவ, பொருளாதார மற்றும் அரசியல் விவ காரங்களின் முக்கிய மத்திய பகுதியாக விளங்கிவந்துள்ளன.

இப்பகுதியில் புலிகளால் நிர்மாணிக்கப் பட்டுள்ள கட்டடங்களின் அஸ்பெஸ்ரஸ் கூரைகள், போகன்வில்லா செடிகளால் மிகக் கவனமாக விமானத்திலிருந்து கண்டு பிடிக்க முடியாதவாறு மூடிமறைக்கப்பட் டிருந்ததாக கூறப்படுகின்றது. கூரைகளில் வைக்கப்பட்டிருந்த பெரிய பாத்திரங்களில் இச்செடிகள் வளர்க்கப்பட்டிருந்தன- பாத் திரங்கள் இலை கொடிகளால் மறைக்கப்பட் டிருந்தன.

ஐ.நா.அதிகாரிகள், சர்வதேச அரச சார் பற்ற நிறுவனத் தலைவர்கள் மற்றும் கொழும்பிலுள்ள ராஜதந்திரிகள் போன் றோர் கிளிநொச்சியிலுள்ள புலிகளின் தலைவர்களை சந்திப்பதற்கு மல்லாவிக்கு விஜயம் செய்வதுண்டு.

1995 இல் யாழ்ப்பாணத்தைக் கைப் பற்றிய கையோடு 1996 இல் கிளிநொச்சி யையும் இராணுவம் கைப்பற்றியிருந்தது.

1998 நவம்பர் 26 ஆம் திகதி 'ஓயாத அலை கள்' நடவடிக்கையின் மூலம் புலிகள் மீண் டும்கிளிநொச்சியைக்கைப்பற்றியிருந்தார்கள்.

மிக உக்கிரமான போர்

அதன் பிறகு கிளிநொச்சி புலிகளின் மத்திய அதிகாரப் பகுதியாக விளங்கி வந் தது. 2002 ஆம் ஆண்டு நோர்வேஜிய அனு சரணையில் போர் நிறுத்த ஒப்பந்தம் அமு லுக்கு வந்ததையடுத்து கிளிநொச்சி மேலும் முக்கியத்துவம் பெறலாயிற்று. புலிகளின் பொலிஸ், நீதிமன்றம், சிறைக்கூடம், வருமா னத் துறைகள், தொலைத்தொடர்பு போன்ற அலுவலகங்களும் இங்கு அமைந்திருந்தன.

மல்லாவியிலிருந்து இராணுவத்தின் 57 ஆவது பிரிவு படை நகரின் வெளிப்புறப் பகுதிக்கு நகர்ந்தபோது கடந்தவாரம் புலிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி னார்கள்.

முதலாவது செயல் அணியினர் இப்பகுதி யில் மிக உக்கிரமாகப் போராடினார்கள். அது தற்காலிகமாக முடிவுற்றது. அதே சம யம் முன்னேறும் படையினரைத் தடை செய்வதற்கான செயற்பாடுகளில் புலிகள் ஈடுபட்டிருந்தார்கள். கண்ணிவெடிகளை புதைப்பதும் இதில் ஒன்று. மல்லாவி-மாங்குளம் வீதி, மல்லாவி-கொக்காவில் வீதி ஆகிய பாதைகள் இதில் அடங்கும். இந்த வீதிகளால் நகரும் படையணிகள் ஏ-9 பிர தான வீதியைச் சென்றடையும். அங் கிருந்து வடக்கு திசையில் கிளிநொச்சிக்கு குறுகிய தூரமே உள்ளது. இதேவேளை 2 ஆவதுசெயல் அணியும் மூன்று முறிப்பிலி ருந்து கிழக்குத் திசையாக ஏ-9 பிரதான வீதியை நோக்கி முன்னேறி வருகின்றது. அவர்கள் ஏற்கனவே பாலமோட்டைக் கிரா மத்தைப் பிடித்துள்ளனர். அங்கிருந்து புலி களை பின் நகரும்படிசெய்துள்ளனர்.

வன்னியில் மேற்குப் பகுதியுடன் வெலி ஓயாமுனையின் வடக்குப்பகுதியிலும்மோதல் இடம்பெற்று வருகின்றது. 59ஆவது படை யணி இங்கு சில வெற்றிகளைப் பெற்றிருப் பதாகக் கூறப்படுகின்றது.

ஒலுமடு, ஒட்டுசுட்டான், குமுழமுனை மற்றும் அலம்பில் ஆகிய மையப் பகுதிகளில் புலிகளின் கடும் தடுப்பு அரண்களை எதிர் கொள்வதற்கு குறிப்பிட்ட அளவு தூரத்தை படையினர் அடர்த்தியான காடுகளைக் கடந்து சென்றாக வேண்டும்.

இப்பகுதியில் முன்னேறும் படையினர், ஆங்காங்கே படையினரின் நகர்வுகளைக் கண்காணிக்கும் கெரில்லாக்களின் எதிர்ப் புக்களை மட்டுமே சிறுசிறு அளவில் எதிர் கொண்டுள்ளனர். இப்பகுதியிலும் கண்ணி வெடிகளையும் மிதிவெடிகளையும் இரா ணுவம் முன்னேறுவதைத் தடுப்பதற்காக புலிகள் விதைத்து வருவதாக செய்திகள் எட்டியுள்ளன.

கைப்பற்றப்பட்டுள்ள இப்பகுதியிலி ருந்துதான் ஓகஸ்ட் 26 ஆம் திகதி திருகோண மலை கடற்படை தலைமையகத்தை தாக் குவதற்கு புலிகளின் இரண்டுதாக்குதல் விமானங்கள் புறப்பட்டிருப்பதும், பின்னர் திரும்பிவந்து இறங்கியிருப்பதும் தெரிய வந்துள்ளது.

என்னும் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கும்

கடந்தவாரச்சண்டையை அடுத்து புலிகள் தம் வசம் வைத்துள்ள பிரதேசத்தின் விவ ரம் தெளிவாகத் தெரியவந்துள்ளது. வடக் கில் மிகக் கடும் பாதுகாப்புடன் பேணப்படும் முகமாலைப் பிரதேசம் கிழக்கில் இந்து சமுத்திரம் ஒருபக்கமும் கடற்புலிகளின் நிலத் திலும் கடலிலும் கடும் பாதுகாப்பும் அரண்களாக இருந்து வருகின்றன. மேற்குக் கரையில் மல் லாவி, வெள்ளாங் குளம், முறிகண்டி மற் றும் அக்கராயன் குளம் பகுதிகளின் வெளிப் பு றத்தை இரா ணுவம் அடைந்து விட் டது என்பதை கடந்த வார யுத்தம் எடுத்துக் காட் டியுள்ளது. தெற்கில் புலிகளின் கடும் பாது காப்பு அரண்களை அடைவதற்கு இன் னும் செல்லவேண்டியிருக்கும்.

புலிகள் தமது போராளிகளையும் வளங்க ளையும் கொண்டு தற்காத்துக் கொள்வதற் காக இந்த நிலப் பிரதேசத்தைப் பாதுகாப் பதற்கு போராடியேயாக வேண்டும்.

நீண்டகாலம் நடைபெறும் எந்த வொரு போரிலும் பெருமளவு ஆள் களையும் பொருள்களையும் போரில் ஈடுபட்டுள்ள வர்கள் இழக்க வேண்டியிருக் கும் என்பது இரகசியம் அல்ல. கடந்தவாரம் ஜூலை 2 ஆம் திகதி மன்னார் முனையில் அரசாங்கம் போரைத் துவக்கியது. அதன் பிறகு மடு தேவாலயப் பகுதி மற்றும் அதைச் சுற்றி யுள்ள பகுதிகளை இந்த வருடம் ஏப்ரல் மாதம் மீண்டும் கைப்பற்றியுள்ளது. அதன் பிறகு ஜூலை 16 ஆம் திகதி கடற்புலி களின் தளமான விடத்தல் தீவைக் கைப்பற்றி யது. அதன்பின் வன்னேரிக்குளம் பகு தியைக் கைப்பற்ற இராணுவம் முன்னேறி வருகின்றது. மல்லாவி மற்றும் அரு காமையிலுள்ள கிராமங்களும் கைப் பற் றப் பட்டன.

இந்த வருடம் ஜனவரி 7 ஆம் திகதி வெலி ஓயாவுக்கு வடக்கு நோக்கிய தாக்குதல் ஆரம்பமாகிற்று- இப்பகுதியில் எவருக்கும் உரித்தில்லாத பெரும்பகுதி நிலப்பரப்பு அரச படைகளிடம் வந்தது. இப்பொழுது முன்னர் புலிகளால் கட்டுப் பாட்டில் வைத்திருக்கப்பட்ட பெரும்ப குதி நிலப்பரப்பை இராணுவம் கைப்பற் றியிருக்கிறது.

மரபுமுறைப் போரில் தங்களை விட அதிக தரம்கொண்ட இராணுவத்துடன் போரிடுவதில் கடந்த பல மாதங்களாக தாம தப் போக்கினைக் கடைப்பிடித்து வந்த புலிகள்-இராணுவத்துடன் நெருக்கமான மோதல்களைத் தவிர்த்து வந்திருந்தாலும் தமது தரப்பில் சில போராளிகளையும் கன ரக இராணுவப் பொருள்களையும் இழக்கவே செய்துள்ளார்கள். அதேபோல் இராணுவத் துக்கும் இழப்புகள் ஏற்பட்டுள்ளது. இவை பற்றி எவரும் விமர்சிப்பதோ புள்ளி விவ ரங்களை வெளியிடுவதோ தவிர்க்கப்பட வேண்டியுள்ளது. அதற்கானகாரணம்வெளிப் படையானதே. என்றாலும் அவைகளில் சில ஏற்கனவே வெளியாகியுள்ளன.

எதுவானாலும் புலிகள் கடந்த வாரம் இரு முனைகளிலும் இராணுவ முன்னேற் றத்தை தடுப்பதற்கு தமது உறுதிமிக்க போராளிகளை ஈடுபடுத்தியிருப்பது சில கேள்விகளை எழுப்பியுள்ளது. நாச்சிக்குடா வுக்கு தெற்கிலும் மல்லாவி, துணுக்காய், யோகபுரம் பகுதிகளுக்கு வெளிப்புறமும் இது அவதானிக்கப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள தமது வலுவான பகுதிகளை தற்காத்துக் கொள்வதற்காக உறுதிமிக்க போராளிகளை அருகருகே நின்று போராட விடுவித்திருக்கின்றார்களா? இது வன்னியின் மேற்பகுதியில் அவர்கள் மேற்கொண்ட நிலைப்பாடு தொடர்பாக கேள்வியை எழுப்புகின்றது. அங்கே அவர்கள் பெரும் எதிர் மோதல்களைத் தவிர்த்தார்கள். ஆட் டிலறி மற்றும் மோட்டர் தாக்குதல்களையே பெரும்பாலும் பயன்படுத்தினார்கள். இது நீண்டகாலம் தாக்குப் பிடிக்க முடியாத தாமதிக்கும் போர் உத்தியா? இதற்காகத் தான் மடு தேவாலயம் மற்றும் விடத்தல் தீவு பகுதிகளில் இறுதிக்கட்ட போரை நிகழ்த்தாமல் மிக முக்கிய இடங்களைக் கைவிட்டார்களா?

இப்பொழுதுள்ள நிலைமைகளை அவ தானிக்கையில் இரண்டு தரப்பினருக்கும் மிகப் பயங்கரமான ஒரு போரினை முன் னெடுக்கப் போகிறார்கள் என்று தெரிகின் றது. இராணுவத்தைப் பொறுத்தவரை கெரில்லா கட்டுப்பாட்டு பகுதிகளைக் கைப் பற்றுவதும் அவர்களின் தலைவர்களைப் போட்டுத்தள்ளுவதும் மட்டுமல்ல, அநேக இலங்கையர்களுக்கும் கொழும்பிலுள்ள சில ராஜதந்திர சமூகத்தினருக்கும் கூட இது இன்னும் சில மாதங்கள் அல்ல சில வாரங்களில் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு காரியமாகிவிட்டது. அவர் கள் ஆணித் தரமாக நம்புகிறார்கள். புலிகள் தோற்றடிக் கப்பட்டு விடுவார்கள் என்று ஆனால் அந்த பலகோடி ரூபாய் பெறுமதி யான கேள்வி விடையின்றி அப்படியே இருக்கின்றது.

தோல்வியைத் தவிர்க்க புலிகள் தமது வளங்கள் யாவற்றையும் பயன்படுத்த வேண்டியிருக்கும். இராணுவமும் தனது நோக்கத்தை அடைய எதிரிலுள்ள தடைக ளை முறித்தாக வேண்டும்.

இனிவரும் வாரங்கள் இவைகளுக்கெல் லாம் பதில் தருவதாக அமையும். (ப)

கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் புதிய இடங்களை இராணுவம் கைப்பற்றியது

அடுத்து வரும் வாரங்களில் தீர்க்கமான முடிவுகள் தெரியும்

வன்னியில் புலிப் போராளிகள் இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்- *புலிகள் வெளியிட்டுள்ள படம்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SPOKEN ENGLISH DAY BY DAY

12 வாரகால பயிற்சி நெறி

VCD/ DVD/CD-ROMS TICK-SOFT- விற்பனையில்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு பயணம் செல்வோர் ஆங்கில மொழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகவும் உகந்தது.

மின்வரும் புத்தக நிலையங்களில் பெறலாம்.

நூபாலசிங்கம்-யாழ். அன்னை-யாழ். ஆல் சிலோன் யாழ்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1017 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

06 21 29 41

மீனம்

05-09-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500000000 - 500020767

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் எண்ணிக்கை	பரிசுத் தொகை	மொத்தம்
1 இலக்கம்	213,972	20/-	4,279,440/-
2 இலக்கங்கள்	19,679	40/-	787,160/-
1 இல. + லக்கினம்	19,375	60/-	1,162,500/-
2 இல. + லக்கினம்	1,795	200/-	359,000/-
3 இலக்கங்கள்	517	1000/-	517,000/-
3 இல. + லக்கினம்	59	10,000/-	590,000/-
4 இலக்கங்கள்	1	200,000/-	200,000/-
4 இல. + லக்கினம்	1	2,000,000/-	2,000,000/-
மொத்தம்			9,895,100/-
வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு	5	100,000/-	500,000/-
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை	255,404		10,395,100/-

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

தொடர் இலக்கம் 400000000 க்கு மேற்பட்ட நீல நீற டிக்கட்டுக்கள் 2008 செப்டம்பர் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

களுத்துறை	500007357-0-41
காலி	500003020-7-44
மொனராகலை	500006825-0-43
கண்டி	500001054-9-12
கொழும்பு	500001568-8-48

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் ஐைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

தீண்மக்கழிவு விழிப்புணர்வு தொடர்பாக உள்ளூராட்சி சபைகளுக்குப் புத்தகங்கள்

மானிப்பாய், செப்.8

தேசிய தீண்மக்கழிவு முகாமைத்துவ நிறுவனமும்-மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து தயாரித்த இரு புத்தகங்கள் நாடளாவிய ரீதியில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சினால் பிரதிப் பணிப்பாளர் எல்.மங்கலிக்க இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

பிரதேச மட்டத்தில் தீண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி நகரத்தினைச் சுத்தமாகப் பேணிப்பாதுகாக்க உள்ளூராட்சி மன்றங்கள் முன்வர வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே புத்தகங்கள் உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பப்படவுள்ளன.

*தீண்மக்கழிவு முகாமைத்துவ அபிவிருத்தியில் பொது மக்களின் பங்களிப்பு.

*தீண்மக்கழிவு முகாமைத்துவத்திட் டங்களும் நிதி முகாமைத்துவமும்.

ஆகிய இரு புத்தகங்களுமே இவ்வாறு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

(203-95)

மோட்டார்சைக்கிள் முட்கம்பியில் சிக்கியதில் ஒருவர் காயம்; சங்கத்தானையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.8

வீதியோரமாகக் காணப்பட்ட முட்கம்பியில் மோட்டார் சைக்கிள் சிக்கியதில் அதில் பயணித்தவர் காயமடைந்தார்.

இச் சம்பவம் சங்கத்தானையில் இடம்பெற்றது.

எதிரே வந்த வாகனத்திற்காக வீதியோரமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திய போதே கொமாண்டோ கம்பியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த ஏ.ஆனந்தவடிவேல் (வயது 45) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (203-207)

New batches start on:- 14.09.2008

CAD & BS
(காலம்:- 6 மாதம்)
Diploma in Computer Aided Drafting and Building Studies

கட்டடத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்

கட்டடத் தொழில்நுட்பவியலாளர்கள், கட்டடத் தொழில்நுட்பமாணவர்கள் க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி. இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவோ அல்லது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவோ ஓர் சிறந்த அத்திவாரமாகும்.

Course Contents :
1.Building Technology
2.Construction Materials
3.Building Services
4.Building Drawings
5.Quantity Surveying
6.Basic Theory of Structures
7.Computer Aided Drafting

CBM
(காலம்:- 6 மாதம்)
Diploma in Contemporary Business Management

முகாமைத்துவத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நவீன முகாமைத்துவத்தின் எண்ணக்கருக்களையும், சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களையும் பயன்படுத்த தக்கவகையில் வடிவமைக்கப்பட்டதாகும். இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவும், வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றது.

Course Contents :
1.Management & Organizational Behaviour
2.Human Resource Management
3.Marketing Management
4.Financial Management
5.Business Communication
6.ICT For Managers

IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@eltnet.lk Web: www.iiscitycampus.com

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி செல்லத்துரை இராஜேஸ்வரி

09-08-2008 அன்று சிவபதமடைந்த எம்குலதெய்வம் அன்னை திருமதி செல்லத்துரை இராஜேஸ்வரி அவர்களின் இந்து சாந்திப்பிரார்த்தனையும் சபிண்டீகரணக் கிரியைகளும்-இன்று (08.09.2008) திங்கட்கிழமை முற்பகல் 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுகளிலும்-அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மண்ணில்
26.04.1935

விண்ணில்
09.08.2008

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(77697)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேசிய மட்ட பாடசாலைகள் ஹொக்கிப் போட்டிக்கு முதல்தடவையாக குடாநாட்டுப் பாடசாலைகள்

வலி.வடக்கு, செப்.8

தேசிய மட்டத்தில் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெறும் ஹொக்கி விளையாட்டுப் போட்டியில் முதல் தடவையாக யாழ். மாவட்டப் பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

யாழ். மாவட்ட ஹொக்கி அணிகள் தேசிய மட்டத்தில் இடம்பெறும் போடடிகளில் கலந்துகொள்வதற்காக நேற்று ஐந்து அணிகள் கப்பல் மூலம் தமது பயணத்தை மேற் கொண்டுள்ளன.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் கலந்துகொள்வதற்காக வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்

இறுதியாட்டத்துக்கு சென்.பற்றிக்ஸ் தகுதிபெற்றது

வலி.வடக்கு, செப்.8

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப் பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்ற கிரிக் கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் விளையாட யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையே இடம் பெற்ற ஆட்டத்தில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏற்கனவே 15 வயது கிரிக்கெட் அணியினரும் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சென். ஜோன்ஸ் கல்லூரியும் -

பெண்களுக்கான 19 வயதுப் பிரிவினருக்கான போடியில் கலந்துகொள்வதற்காக

சங்கானைக் கோட்டத்தில் உதைபந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு, செப்.8

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் எதிர் வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

14, 16,18 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெறவுள்ள இப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 10 பாடசாலை அணிகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டும்-

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 9 பாடசாலைகள் 04 குழுக்களாக பிரிக்கப்பட்டும்-

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 05 பாடசாலைகள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டும் மோதவுள்ளன.

போட்டிக்கான ஏற்பாடுகளை சங்கானை கல்விக்கோட்ட விளையாட்டுக் குழு செயலாளரும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அதிபருமான க. சபாரெட்ணம் சிங்கி மேற்கொண்டுள்ளார். (1-86)

உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் சென்றுள்ளன. (1-86-95)

இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன்

வலி.வடக்கு, செப்.8

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்ற 'சுப்பசிக்ஸ்' போட்டியின் இறுதி யாட்டத்தில் விளையாட தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தகுதிபெற்றுள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப் பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வரும் 15 வயதுப் பிரிவினருக்கான 'சுப்ப சிக்ஸ்' போட்டியில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் சுற்றுப் போட்டியில் சம புள்ளிகளை பெற்று இருந்த நிலையில் இரு கல்லூரிகளும் மோதிக் கொண்டதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இறுதிப் போட்டியில் விளையாட தெரிவு செய்யப்பட்டுள்ளது. (1-86)

சோனகதெரு வடக்கு (ஜே/87) கிராம அலுவலர் பிரிவின் சிறுவர் விளையாட்டு விழா அண்மையில் ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினரான செல்வன் ஆர். சேந்தன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் பலூன் உடைத்தல் போட்டியை இரண்டாவது படத்திலும் காணலாம். நிகழ்வுக்கு தலைமை வகித்த சிறுவனும் முதலாவது படத்தில் உள்ளார்.

(படங்கள் - றாஜினி)

கொக்குவில் இந்துவை கலைத்த போதும் வெற்றிபெற முடியாது போன யாழ்ப்பாணக் கல்லூரி

நிகேதனின் அபார ஆட்டம் வீணாகிப் போனது

வலி.வடக்கு, செப்.8

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 07 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப் பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மிகவும் விறுவிறுப்பாக மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பவிந்திரன் 43 பந்துகளில் ஐந்து நான்குகளுடன் 37, கே. நிரோஜன் 34 பந்துகளில் ஒருஆறு, மூன்று நான்குகளுடன் 34, யனுகுலன் இரண்டு நான்குகளுடன் 26, கபில்ராஜ் மூன்று நான்குகளுடன் 22, யனுதாஸ் 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 53 ஓட்டங்களும் பெறப்பட்டன.

முரளிவாசன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 27 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், ஸ்ரீகுகன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், நிகேதன் 10 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற வருடன் 44 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பிரசோபனன் 05 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், அமலதரன் 04 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

220 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடகளமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி பெரும் அவதானத்துடன் வெற்றி இலக்கை நோக்கி நகர்ந்த போதிலும் இலக்கை அடைய முடியவில்லை.

நிகேதன் பெற்ற 90 என்ற ஓட்ட எண்ணிக்கையுடன் 47.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

நிகேதன் பத்து நான்குகளுடன் 123 பந்துகளில் 90, சீராளன் நான்கு நான்குகளுடன் 45 பந்துகளில் 40, ஸ்ரீகுகன் ஐந்து நான்குகளுடன் 88 பந்துகளில் 30 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 20ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய பவிராஜ் 7.3 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், பவிந்திரன் 08 ஓவர்கள் பந்து வீசி 46 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், நிரோஜன் 10 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், யனுதாஸ் 10ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், கார்த்திக் 06 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இறுதிப்போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளது. (1-86)

அபார பந்து வீச்சால் ஹாட்லியை மடக்கி 8 ஓட்டங்களால் வென்றது கொக்குவில் இந்து

87 ஓட்டங்களை விளாசினார் நிரோஜன்

வலி.வடக்கு, செப்.8

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கு இடையே இடம்பெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி எட்டு ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவினருக்கான காலிறுதி ஆட்டம் ஒன்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியம் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 32.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 138 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

கே.நிரோஜன் 74 பந்துகளில் பதின் மூன்று நான்குகளுடன் 87, பவிந்திரன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்களும் பெறப்பட்டன.

துசாந் 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 43 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும், விஸ்னுகாந் 8.2 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.



139 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஹாட்லிக் கல்லூரி நிதானமாக விளையாடிய போதிலும் வெற்றி இலக்கை அடைவதற்கான சந்தர்ப்பத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி பந்து வீச்சாளர்கள் வழங்கவில்லை.

46.5 ஓவர்களில் 130 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்ததைத் தொடர்ந்து போட்டியில் இருந்து ஹாட்லிக் கல்லூரி விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

கபில்ராஜ் 51, பந்துகளில் மூன்று நான்குகளுடன் 37 , புருசோத்மன் ஒரு நான்குகளுடன் 21, யசிதரன் 18 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 31 ஓட்டங்களும் வழங்கப்பட்டன.

கார்த்திக் 7 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கே.நிரோசன் 10 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும், யனுதாஸ் 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், பிரதீப் 2 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கபில்ராஜ் 7 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பவிராஜ் 6.5 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

வேலணை விளையாட்டு கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், செப்.8

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள விளையாட்டு கழகங்களுக்கென 2008 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவால் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு யாழ். மாநகர் பிரதி நிதி சூசைப்பிள்ளை அலெக்ஸாண்டர் (சால்ஸ்) விசேட பிரதி நிதியாகவும் ஊர் காவற்றுறை பொறுப்பாளர் காந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். பின்வரும் விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக் கழகம், அம்பிகைநகர் உதயசூரியன் விளையாட்டுக்கழகம், புங்குடுதீவு காந்தி விளையாட்டுக் கழகம், துறையூர் விளையாட்டுக் கழகம், சேன் பிலிப்ஸ் விளையாட்டுக் கழகம் (அல்லைப்பிட்டி),நயினாதீவு அண்ணா விளையாட் டுக் கழகம், நயினாதீவு முஸ்லிம் சமாதான விளையாட்டுக் கழகம், நயினாதீவு ஞானவைரவர் விளையாட்டுக் கழகம், நயினாதீவு அம்பிகாவிளையாட் டுக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்துவ சேவையின் வெள்ளி விழா

இலட்சுமணன் தோட்டம்,
நெல்லண்டை, தும்பளை.

குருத்துவப் பட்டம் பெற்று வெள்ளிவிழாக் காணும் இலட்சுமணன் தோட்டம், தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களை பல்லாண்டு காலம் சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றி குருத்துவ சேவையில் மேன் மேலும் வளர்ச்சியுற வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ த.வைத்திலிங்க ஐயர்,
ச.ஜெகதீஸ்வரி (நளினி).

(#1554531)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
09
.
10
.
1938

இறப்பு
22
.
08
.
2007

திருமதி வேலாயுதம் தங்கரத்தினம்

அன்பான எமதருமை அம்மாவே!
ஓராண்டு தான் சென்றாலும்
உன் மறைவால் எப்போதும்
ஏங்கியே நாம் நிற்கின்றோம்
இன்றோடு வருடமொன்று ஆகிவிட்ட போதும்
எம் முன்பாக நீர் நிற்கும் காட்சி என்றும் தெரிகிறதே
எம் உடலோடு உயிர்போல எம்மோடு நீ இருந்தாய்
உமைப் பிரிந்து ஏங்கி நித்தம்
எப்போதும் ஏங்குகின்றோம்
இனிதான நல்வாழ்வில் எப்போதும் துய்க்கவே
தங்கள் இனிய பிள்ளைகள் நாம்
எப்போதும் வேண்டுகின்றோம்.

''தங்கவாசர'',
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(776779)

வேலணைப் பிரதேச சபையில் கணனிப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,செப்.8

வேலணை பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு பிரதேச சபையின் திட்டமிடல் பிரிவில் கணனிக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

இளைஞர் கணனி சேவைகள் நிறுவனத்தினரால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அன்றையதினம் முழு நேர விரிவுரைகளும் செயன்முறைப் பயிற்சி யும் இடம்பெறவுள்ளன.

பதிவு செய்தவர்களை உரிய நேரத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-95)

சாவகச்சேரி வைத்தியசாலையில் மண்டபம் அமைப்பு

சாவகச்சேரி ஆதார வைத்தியாலையில் பெண்கள் விடுதிக்கு முன்பாக மண்டபம் அமைக்கப்படுகின்றது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் கொடிவாரம் மூலம் அறவிடப்பட்ட நிதியிலிருந்து மண்டபத்தினை அமைத்து வருகின்றனர்.

மக்கள் மீளக்குடியமர்ந்த வேளையில் வெளிநோயாளர்கள் பிரிவு, பெண்கள் விடுதி ஆகியவற்றின் முன்பாக தற்காலிக மண்ட பம் அமைக்கப்பட்டது.

ஏற்கனவே வெளிநோயாளர் பிரிவுக்கான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-207)

வேலணை பிரதேச சபையில் 18 வருடங்கள் சேவையாற்றியோர் பொற்கிழி வழங்கிக் கௌரவிப்பு

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வேலணை பிரதேச சபையில் தொடர்ந்து 18 வருடங்கள் சேவையாற்றியவர்கள் பொற் கிழி மற்றும் விருது, சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வேலணை பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் இதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளார்.

பிரதேச சபையின் மேம்பாட்டுக்காக தொடர்ந்து 18 வருடங்கள் சேவையாற்றிய 9 பேர் உள்ளூராட்சி வார இறுதி நாளில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மிக வினைத்திறனாக இயங்கும் 3 சன சமூக நிலையங்களுக்கும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

இதனை விட பிரதேசத்தினை சுத்தமாக வைத்திருக்கும் மற்றும் சுகாதார மேம்பாட்டு வசதிகளை நேர்த்தியாக மேற்கொள்ளும் சுகாதாரத் தொழிலாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர் என அவர் மேலும் கூறினார். (203-95)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎: 0112334603
அனைத்துப் பார்மசிகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா கறுமணி நிறுவனம்
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
10
.
07
.
1940

மறைவு
09
.
08
.
2008

அமரர் ஸ்ரீமான் பேரம்பலம் பாலசுப்பிரமணியம்

திதி: அட்டமி

09.08.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் அப்பாவின் வீட்டுக்கிரியைகள் இன்று (08.09.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விவானை,
களபூமி, காரைநகர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(78252)

மரண அறிவித்தல்

முருகன் மகாலிங்கம்

(முன்னாள் லிகிதர் (கிளாக்), கிளிநொச்சி M.O.H)

புத்தூரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் கடந்த 24.08.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன்- பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிமியோன்- றோஸ்மணி தம்பதியரின் மருமகனும் மரீய றீட்டாவின் (முன்னாள் மருத்துவ தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும் மனோஜனின் பாசமிகு தந்தையும் இராசதுரை (ஜேர்மனி), இராசேந்திரம், துரைராசா, வசந்தராணி (லண்டன்), தியாகராஜா (இந்தியா), அற்புத்ராசா (யாழ்.போதனா வைத்தியசாலை), யோகராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகமுத்துவின் பெறாமகனும் மகேந்திரம் (லண்டன்), பாக்கியம், புஸ்பவதி, விஜயமலர், சர்வாம்பிகை (இந்தியா), ஜீவரதி, சுமதி (சுவிஸ்), ஞானசேகரம் (கொழும்பு), இராசசிங்கம் (இந்தியா), மரியராணி, ஜெயராஜா, குணசேகரம், றெஜினா (இத்தாலி), மேரியம்மா, பவுணன் (இத்தாலி), றஸ்கின் (இத்தாலி), ஜெயசீலன் (ஹோலண்ட்), றொபேட் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.09.2008) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அறிவொளி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

தகவல்:
சகோதரர்கள்.

Hand Phone No: 00447821596064.
Land Phone No: 00441142649253.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

சர்வதேச எழுத்தறிவுத் தினம் இன்று உலகெங்கும் அனுஷ்டிப்பு

சர்வதேச எழுத்தறிவுத் தினம் இன்றாகும்.

இவ்விடயத்தில், தென்னாசிய வட்டகையைப் பொறுத்தவரை இன்றைய நிலையில் மற்றைய நாடுகளை விட ஓரளவு முன்னேற்றகரமான நாடாக இலங்கை தன்னைக் கருதிப் பெருமிதப்பட்டுக் கொள்ளலாம்.

ஆனால் நிலைமை தொடர்ந்து முன்னேற்றகரமானதாக - சாதகமானதாக - நீடிக்கும் என்று சொல்வதற்கில்லை என்பதுதான் நாட்டின் யதார்த்தமாக இருக்கின்றது.

செப்டெம்பர் 8 ஆம் திகதியை சர்வதேச எழுத்தறிவுத் தினமாக அனுஷ்டிக்கும் தீர்மானத்தை 1965 இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், கலாசார நிறுவனமான 'யுனெஸ்கோ' அறிவித்தது. 1966 முதல் அது செப்ரெம்பர் 8 இல் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப் பட்டு வருகின்றது.

குறைந்த பட்சம் தமது தாய்மொழியில் எழுதவும், வாசிக்கவும் இயலுமான அடிப்படைத் தகைமையை வைத்து குடிமக்களின் எழுத்தறிவைக் கணக்கிட்டு அது பற்றிய விகிதாசாரம் சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்டு வருகின்றது.

அதன்படி தென்னாசிய வட்டகையில் பங்களாதேஷில் - 41 வீதம், பூட்டானில் - 47 வீதம், நேபாளத்தில் - 48.6 வீதம், பாகிஸ்தானில் - 49.9 வீதம், இந்தியாவில் - 61 வீதம், இலங்கையில் - 93 வீதம், மாலைதீவில் - 97.2 வீதம் என்ற அடிப்படையில் எழுத்தறிவு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதனை எண்ணி, இலங்கை தன்னை மெச்சிக் கொள்ளலாம்.

ஆனால் அதுவல்ல யதார்த்த நிலைமை.

இந்தக் கணக்கீடு, புள்ளி விவரங்கள் எல்லாம் வெறும் எழுத்தறிவைப் பற்றியதே.

ஒரு நாட்டினது அபிவிருத்தி, வளர்ச்சி, சுபீட்சம் எல்லாம் இந்த எழுத்தறிவு வீத உயர்வில் தங்கியிருக்கின்றது என்பது உண்மையே. ஆனால் எழுத்தறிவு மட்டும் உயர்ந்தால் போதுமானதல்ல.

இன்றைய நிலையில் எழுத்தறிவையும் தாண்டிய ஒரு விவகாரமே நாட்டின் மேம்பாடு, வளர்ச்சி, விருத்தி, அபிவிருத்தி, சுபீட்சம் போன்றவற்றைத் தீர்மானிக்கும் பிரதான அறிவியல் காரணியாக அமைந்திருக்கின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ளுவது அவசியமாகின்றது.

சாதாரணமாக வாசிக்கவும், எழுதவும் இயன்ற தகைமையைத் தருகின்ற எழுத்தறிவுக்கு அப்பால் கணனி பற்றிய அடிப்படை அறிவை நாட்டு மக்கள் இன்று பெற்றிருப்பது அத்தியாவசியமாகின்றது.

நாகரிகமடைந்த - வளர்ந்த - மேம்பட்ட - உயர்ந்த - ஒரு சமூகக் கட்டமைப்பை எட்டுவதற்கு கணனி அறிவு இன்று இன்றியமையாதது என்கின்றனர் அறிஞர்கள்.

இலங்கையில் உள்ள மக்களில் ஆக 16.1 வீதத்தினரே ஆகக் குறைந்த மட்ட கணனி அறிவையாவது பெற்றிருக்கின்றனர் என்ற அதிர்ச்சித் தகவலை தற்போதைய புள்ளி விவரங்கள் அம்பலப்படுத்தியிருக்கின்றன.

2004 ஆம் ஆண்டில் இலங்கையில் 9.7 வீதமாக இருந்த கணனி அறிவு பெற்றோரின் எண்ணிக்கை, 2007 இல் 6 வீதம் உயர்ந்திருப்பது வரவேற்கத்தக்கது.

இலங்கையைப் பொறுத்தவரை நகரப்புறத்தில் நாலில் ஒருவரும் (சுமார் 25 வீதம்), கிராமப் புறத்தில் 15 வீதத்தினரும் கணனி தொடர்பான அடிப்படை அறிவைப் பெற்றிருக்கின்றனர்.

பொதுவான எழுத்தறிவு வீதத்தில் இலங்கையை விடப் பின்நிற்கும் சில நாடுகள் கணனி அறிவில் இலங்கையை விஞ்சியதன் மூலம் தத்தமது நாட்டின் வளர்ச்சியையும், விருத்தியையும், அபிவிருத்தியையும் மேம்பாடடையச் செய்து வருகின்றன என்பதும் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.

உலக நாடுகளைப் பொறுத்தவரை சுமார் 78 கோடிப் பேர் எழுத்தறிவுக்கான அடிப்படைத் தகைமையைக் கூடப் பெறவில்லை என்பது மன வேதனைக்கும் விசனத்துக்குமுரிய உண்மையாகும்.

அதாவது, உலகில் ஐவரில் ஒருவருக்கு எழுதப்படிக்கவே தெரியாது.

இப்படி எழுதப்படிக்கத் தெரியாதோரில் மூன்றில் இரண்டு பங்கினர் பெண்கள் என்பது மேலும் மனவருத்தத்துக்குரியது.

இதேசமயம் உலகில் சுமார் பத்துக்கோடி சிறார்கள் அடிப்படைக் கல்வி அறிவு கூடப் பெறமுடியாத நிலையில் கல்வி வசதி, வாய்ப்புகளில் இருந்து வெளியே - புறம் - தள்ளப்பட்டிருக்கின்றனர்.

உலகைப் பொறுத்தவரை அடிப்படைக் கல்வி அறிவு மேம்பட்ட நாடுகளின் வரிசையில் இலங்கைக்கு 89 ஆவது இடம், இந்தியாவுக்கு 147 ஆவது ஸ்தானம்.

ஆனால், நாம் முன்னர் குறிப்பிட்டமைபோல எழுத்தறிவு மட்டும் நாட்டின் வளர்ச்சிக்குப் போதுமானதல்ல.

எழுத்தறிவு விஞ்சிய நாடு என்று கூறப்படும் இலங்கையில்தான் இனக்குரோதமும், பேரினவாதத் திமிரும், மேலாதிக்கச் சிந்தனையும், மேலாண்மைச் செருக்கும் ஆட்சியாளர்கள் மத்தியிலும் பெரும்பான்மை இன மக்களிடையேயும் புரையோடிப்போயிருக்கின்றன.

தீர்க்கதரிசனமற்ற ஆட்சிப்பீடம், நல்லாட்சி செய்ய முடியாத அரசு, யுத்த வெறிப் போக்கால் நாசமாகியிருக்கும் நாட்டின் பொருளாதாரம் என்ற பின்னடைவுகளுக்கும், இப்பின்னடைவுகளால் நேரும் வறுமை, பசி, பட்டினி போன்ற கொடூரங்களுக்குள்ளும் நாடு சிக்கி நிற்கின்றது.

இதனால் எதிர்காலத்தில் இலங்கையில் அடிப்படை எழுத்தறிவிலும் மந்தமான ஒரு சமூகம் உருவாகும் பேராபத்து ஏற்பட்டிருக்கின்றது.

ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி

தேசிய சம்பியனாகி 23 வருடங்களுக்குப் பின்னர் யாழ்.மண்ணுக்குப் பெருமை தேடித் தந்துள்ளது

பெருமிதத்துடன் கூறுகிறார் அதிபர்

யாழ்ப்பாணம்,செப்.8

உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய மட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு 23 வருடங்களின் பின்னர் யாழ்.மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளது ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

இவ்வாறு பெருமையுடன் கூறுகின்றார் மேற்படி கல்லூரியின் அதிபர் அருட்தந்தை ஜே.ஏ.யேசுதாஸ்.

நீர்கொழும்பு ஆவே மரியாள் கன்னியர்மட பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வெற்றி குறித்து போட்டியாளர்களுடன் நீர்கொழும்பில் தங்கியுள்ள கல்லூரியின் அதிபர் உதயனுக்கு தொலைபேசி மூலம் செவ்வி வழங்கினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கல்லூரியின் இந்த அணி தொடர்ந்தும் 3 தடவைகள் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று வந்தது. இவ்வாண்டு தேசிய மட்டத்திலும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு பெருமையடைந்துள்ளது. இதன் மூலம் இந்த அணி தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளது.

2005ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் 2ஆவது இடத்தைப் பெற்றதன் மூலம் 20 ஆண்டுகளுக்கு பின்னர் தேசிய மட்டத்தில் யாழ்.மண்ணுக்கு பெருமை தேடிக் கொடுத்தது. நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் தனது சாதனையை தானே முறியடித்தது.

23 வருடங்களின் பின்னர் யாழ்.மண்ணுக்கும் எமது தீவக மண்ணுக்கும் தேசிய மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொடுத்த பெருமையையும் தனதாக்கிக் கொண்டுள்ளது - என மேலும் தெரிவித்தார். (202-325)

தெய்வச் சிலைகள் சேதமாக்கப்பட்டதை கண்டிக்கிறது இந்துமா மன்றம்

கொழும்பு, செப்.8

கொழும்பு, கிராண்ட்பாஸ் முத்து மாரி அம்மன் ஆலயத்தின் தெய்வச் சிலைகள் சேதப்படுத்தப்பட்டமையைக் கண்டித்து அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாட்டின் இனத்துவேஷ மற்றும் மதத்துவேஷ சம்பவங்களை நடக்காது கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் இந்து மாமன்றம் வலியுறுத்தியுள்ளது.

பொதுவாக இதுபோன்ற அநாகரிக மான வன்செயல்கள் மதவழி பாட்டு தலங்களில் இடம் பெறுவது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

இனத்துவேஷ, மதத்துவேஷ நிகழ்வுகள் நடக்காது கட்டுப்படுத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.-

மேற்படி ஆலயத்தில் நடந்த வன்செயலை காவல்துறையினரும் நீதிமன்ற மும்உடனடியாகவே கவனத்திற்கு எடுத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதை யிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஓரளவு நிம்மதியடைகிறது- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-02)

சந்நியான் ஆச்சிரமத்தில் இன்று

கரவெட்டி, செப்.08

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்வுகளின் வரிசையில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'அருள்தரும் முருகன்' என்னும் தலைப்பில் சிவஸ்ரீ தியாக சோமஸ் கந்தக் குருக்கள் சொற்பொழிவு நிகழ்த்த வுள்ளார். (203-70-236-72)

விரும்பிய இடங்களுக்கு வன்னிமக்கள் செல்வதைப் புலிகள் தடுக்கக் கூடாது!

ஈ.பி.டி.பி. அறிக்கை

கொழும்பு,செப்.8

''வன்னியிலுள்ள மக்கள் தாங்கள் விரும்பிய இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்வதை புலிகள் தடுக்கக்கூடாது. இதற்கு சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.''

- இவ்வாறு தெரிவித்திருக்கிறது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

சொந்த வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்தல்என்பதுதுயரம்நிறைந்த நிகழ்வுதான். ஆனாலும், தமது சொந்தப் பாதுகாப்பின் நிமித்தம் எமதுமக்கள் தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்போது அதைத்தடுத்து நிறுத்துவதுமக்களின்உயிர்வாழும்உரிமைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே கருத வேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பை நோக்கிப் பாதுகாப்புப்படையினர் நகர்ந்து வருகின்றனர். இந்நிலையில் வேட்டோசைகளுக் கும், வெடிகுண்டு சத்தங்களுக்கும் மத்தியில் எமது மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டியதுயரம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. அடுத்த கணம் என்ன நடக்குமோ தெரியாது என்ற ஏக்கத்தில் மட்டுமே ஒவ்வொரு கணங்களும் கழிந்துகொண்டிருக்கின்றன. இந்நிலையில் தமது உயிர் வாழும் உரிமைக்காக பாதுகாப்பான ஒரு சூழலைத் தேடி இடம்பெயர வேண்டிய கட்டாயம் வன்னி மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஆனாலும், புலித்தலைமை தாமே விரும்பித் தேடிக்கொண்ட அழிவுயுத்தத்திற்கு மனிதக் கேடயங்களாக எமது மக்களைப்பயன்படுத்தும்நோக்கில் அவர்களைத் தமது பலாத்காரப் பிடிக்குள் இருந்து நகரவிடாது தடுத்து வருகின்றனர். இது பாரியதொரு மனித உரிமை மீறலாகும்.

தாம் எங்கு வாழவேண்டும் என்பதும், எந்தச் சூழலில் வாழ்வது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் என்பதும் மக்களின் சயமான தீர்மானமாகும். எந்தவொரு படைநகர்வி லும் சரி, படையினருக்கு எதிரான தாக்கு தலி லும் சரி அப்பாவிப் பொதுமக்கள் சிக்குண்டு தவிப்பதும், அதில் அவலங்களைச் சுமப்பதும் ஏற்றுக் கொள்ள முடியாத தொன்று.

உயிர் வாழும் சுதந்திரமும் அதற்காக விரும்பிய இடங்களை நோக்கி நடமாடும்சுதந்திரமும் எமது மக்களுக்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளாகும்.

ஆகவே, மனிதநேய அமைப்புகளும், சர்வதேச சமூகமும், சர்வதேச மற்றும் உள்ளூர் பொது அமைப்புகளும், மதத் தலைவர்களும் எமது மக்கள் தங்களது பாதுகாப்பைத்தேடி விரும்பிய இடங்களுக் குச் செல்வதற்கான கோரிக்கையினைவெளிப்படுத்தவேண்டும். அதற்கான அழுத்தங்களைப் புலித் தலைமை மீது பிரயோகிக்க வேண்டும். இது எமது வன்னி மக்களுக்காக ஈ.பி. டி.பி. விடுக்கும் மனிதாபிமான வேண்டு கோளாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

வலி.கிழக்கில் நடமாடும் சேவை

கோப்பாய், செப்.8

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவு நடமாடும் செயலக சேவை மேற்கொள்ளப்பட வுள்ளது.

பிறப்பு, இறப்பு, விவாகம் சம்பந்தமாக இதுவரை பதிவுகள் எதுவும் மேற்கொள்ளாதிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் பிரிவு கிராம அலுவலரோடு தொடர்பு கொண்டு பிரதேச செயலகத்துக்கு வந்து தகவல்களைப் பெற்று பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான முதல் நடமாடும் சேவை இம்மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளப் படவுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (203-72)

அம்பன் கிராமத்திற்கு வீரைவில் மின்சாரம்

வடமராட்சிகிழக்குஅம்பன்கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட வேலைகள்தற்போதுநடைபெற்றுவருகின்றன.

மின்சாரம் பெறுவதற்கு தேவையான தூண்கள் மற்றும் கேபிள்கள் ஆகியன வந்துசேர்ந்தள்ளதாகவும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் (202-236)

நாலை

ஆவணி 24	09.09.2008 செவ்வாய்க்கிழமை
திதி:	நவமி மு.ப. 10.43வரை
நட்சத்திரம் :	மூலம், அமிர்தம் பி.ப. 12.22வரை
யமகண்டம் :	10.33 - 12.03
ராகுகாலம் :	03.03 - 04.33

அடைக்கலம் தருவாள் அன்னை

"ஆகட்டும் ஆண்டவர் அடிமை" யென
அன்றிவள் சுதனைப் பெற்றாள்
ஆண்டவர் "இதோ உம் மகன்" என்றிட
அவனிற்கே இன்றிவள் தாயானாள்

வேளை நகரில் வேளாங்கன்னியாய்
ஓர்து நகரின் நாயகியாய்
மடுத்தலத்தின் மாதாவாய்
மாந்தர்க்கு அருள்புரிபவள்

பாசத்திற்குச் சொந்தக்காரி இவள்
பாவிகட்காய் பரிந்துரைப்பவளும் இவளே
அகதியாய் அலையும் எம் மக்களுக்கு
அடைக்கலம் தருபவளும் இவளே

மாசின்றி மலர்ந்தவள்
மானிடர் தாயானாள்
மகிழ்வுறுவோம் அவளுதித்த
இப்பொன்னாளில்

(இன்று அன்னை மரியாளின் பிறந்த நன்னாள்)

-பூ.ஜெயவதனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நான்காம் ஆண்டு நினைவஞ்சலி (08.09.2008)

நினைவு கொள்கின்றோம்

ஐயா! நினது திருக்கோயில்
அசையா மணியின் இசைகேட்டும்
ஆர்வர் தொடு நின் சந்நிதியை
அடைந்து பக்தி பரவசமாய்க்
கையால் துதியா துன துறையுள்
காலாற் சூழா தவலித்துக்
கசிந்து கண்ணீர் சொரியாத
கயவனெனையும் ஆண்ட முரு
கையா வருக எமதருமை
அப்பா வருக அன்புருவாம்
அன்னல் வருக நீதிசெயும்
அரசே வருக பொய்யருக்குப்
பொய்யா வருக விரைந்திந்தப்
பொழுதில் விசுவத்தனையிலெங்கள்
பொன்னே வருக துரைவருக
புனிதா வருக வருகவே

'அறக்கட்டளைக் குழுவினர்''.

பண்ணாகம்,
சுழிபுரம்.

பண்ணாகம்
அமரர்
பண்டிதர்
அ.ஆறுமுகம்

தோற்றம் 16.12.1917 மறைவு 08.09.2004

பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட்டு.தெற்கு வட்டுக்கோட்டை

வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த **கதிரவேலு இராசையா** அவர்கள் மல்லாகம் நீதி நிர்வாக மாவட்டத்திற்கான, சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமனம் பெற்றுள்ளார். 13.06.2008இல் மல்லாகம் மாவட்ட நீதிபதி **திருமதி சரோஜினி இளங்கோவன்** முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் வலி.மேற்கு மத்தியஸ்த சபை உறுப்பினராகவும், வட்டு.தெற்கு விழிப்புணர்வுக் குழு உறுப்பினராகவும், மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபை உப-தலைவராகவும், வட்டுத் தெற்கு விவசாய சம்மேளனத் தலைவராகவும், வட்டு/கார்த்திகேய வித்தியாலய அபிவிருத்திச்சபை செயலாளராகவும் கடமையாற்றுகிறார். இவரது பணி மேன்மேலும் சிறக்க எல்லாம்வல்ல மனோன்மணி அம்பாளை வேண்டுவதோடு, அன்னாரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர்

ஐ.நா. உணவு நிறுவனம் இலங்கைக்கு நிதி உதவி

கொழும்பு,செப்.8

சர்வதேச ரீதியில் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தினால் இலங்கை மக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக ஐக்கிய நாடுகளின் சர்வதேச உணவு மற்றும் விவசாய நிறுவனம் 5 லட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்த நிதி, அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இதேவேளை, 600 மெட்ரிக்தொன் நெல் விதைகளை விவசாயத் திணைக்களம் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் நன்மையடையவுள்ளனர் என வும் கூறப்படுகின்றது. (சி)

கமநல சேவைக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,செப்.8

கமநல அபிவிருத்தி சேவையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கானபோட்டிப் பரீட்சை மும் மொழிகளிலும் கொழும்பில் மட்டும் நடத்தப்படவுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் இப் பதவிக்குவிண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களைஅடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் 'கமநல அபிவிருத்திஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், த.பெ.இல. 537, கொழும்பு - 7' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 09.05.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

(202)

கண்ணீர் அஞ்சலி

தாமோதரம்பிள்ளை இராமலிங்கம்

(முன்னாள் அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

பதினான்கு ஆண்டுகள் ஆசிரியராய்
உபஅதிபராய்
பதினோரு ஆண்டுகள் அதிபராய்
வீரசிங்கத்தே
பணி புரிந்த எம் இராமலிங்க வள்ளலே
பிரிந்த செய்தி எம்மை வாட்டுதே!
உன்னதமான உம் உள்ளத்து உயர்வும்
கள்ளமில்லாச் சிந்தையும் கட்டாயம்
கடவுளடி சேர்க்கும்.....

25/8/2008 அன்று இறைபதமெய்திய எமது பாடசாலை முன்னாள் அதிபர் அமரர் தாமோதரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் சேவையை நினைவுகூர்ந்து அவரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெருவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

YOGI'S BEAUTY

(Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)

குறுகிய கால புதிய பிரிவுப் பயிற்சி வகுப்புக்கள்
15.09.2008 அன்று ஆரம்பமாகவுள்ளன.

★ அழகுக் கலை
(Beauty Culture)
★ முக ஒப்பனைகளும் தலை அலங்காரமும்
(Makeup and hair Dressing)
★ கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள்
(Cake Icing and Sugar Flowers)
★ நவீனமுறையிலான இலகு சாறி பிளவுஸ் கட்டிங்
(Easy Latest Saree Blouse Cuttings)

ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

T.Phone
021 222 2796
0602210077
0777164923

75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

அமரர்
பொன்னுத்துரை செல்லம்மா

தோற்றம் 15.01.1921

மறைவு 09.08.2008

கோண்டாவில் கிழக்கு, ஞானவயிரவர் வீதியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கு மாசிவன் சந்தி, இராஜ வீதியை வதிவிடமாகவும் கொண்ட அன்னாரின் வீட்டுக் கிருத்தியம் இன்று (08.09.2008) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நீர்வேலியில் இடம்பெறும். அத் தருணம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உதிர்ந்து விட்ட பூவாக
மண்ணில் மறைந்து விட்ட போதிலும்
நெஞ்சில் எழுதினவைத்த உன்
நினைவுகள் உயிரோடு வாழும்.

மீளாத்துயரில்:
அமரர் சிங்கராசா குடும்பம் (உரும்பிராய்)
பூபாலசிங்கம் குடும்பம் (பிரான்ஸ்),
விஜயரத்தினம் குடும்பம் (மருதனார்மடம்),
சாரதா இரத்தினசிங்கம் குடும்பம் (கனடா),
வசந்தகுமார் குடும்பம் (கனடா).

நடராசா சந்துரு,
இராஜவீதி,
நீர்வேலி வடக்கு.

சிவமயம்

தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் சர்வதாரி வருஷம் ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் (31.08.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது தாயார் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த
திருமதி நடராஜ ஐயர் கமலாம்பிகை அம்மா
அவர்களின், ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

2008.09.09- செவ்வாய்க்கிழமை- தசாகம் 11 மணிக்கு.
2008.09.10 - புதன்கிழமை-ஏகோதிஷ்டம்,மாசியம்.
2008.09.11- வியாழக்கிழமை- சபிண்டீகரணம்.
2008.09.13- சனிக்கிழமை-கிரஹயக்ஞம்,சமாராதனை.
நண்பகல் 12 மணிக்கு மதியபோசனம்.

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசிமட அரசடிப்பிள்ளையார் கோவிலடி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

பிரம்மஸ்ரீ.ந.சபாரத்தினக் குருக்கள்.
பிரம்மஸ்ரீ.தியாகராசா சர்மா.

குறிப்பு:-உற்றார்,உறவினர்கள்.அன்பர்கள் அனைவரும் இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[78257]

கலாலயா

பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான தரமித குறுகிய கால பயிற்சிகள்

✻ **3 மாத கால** கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், பப்றிக் வர்ணம் தீட்டுதல், பூவேலை, கைவேலை, Saree Work.

மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் Facial, மணமகள் அலங்கார வகுப்புகள் ஆரம்பமாகும்.

✻ தையல் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாத கால** உடை தயாரித்தல் வகுப்புகள்.

✻ தையல் தெரிந்தவர்களுக்கான **இருவாரகால** சாறி பிளவுஸ், பஞ்சாபி, கவுண், சட்டை, Skirts தைத்தல்.

✻ **இருவாரகால** சேலையில் வர்ணம் தீட்டல் (Saree Painting) வகுப்புகள்.

சனி ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 14-09-2008
திங்கள்முதல் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 15-09-2008

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.

கண்ணீர் அஞ்சலி

அருட் சகோதரி
லூசில்லா கிறிஸ்தோபிள்ளை H.F.B

எம் குருத்துவக் கல்லூரி குடும்பத்தின்
அன்னையாக மிளிர்ந்து
அன்பையும், அறிவையும், ஒழுக்கத்தையும்
ஊட்டி வளர்த்த தாயே!
உங்களுக்கு எம் நெஞ்சத்தின் நன்றிகளும்
கண்ணீர் அஞ்சலியும்
இறைவன் திருவடியில் நித்தியத்துக்கும்
இளைப்பாறுங்கள்.

[75258]

அதிபர், அருட்தந்தையர்
குருமாணவர்கள்,
பணியாளர்கள்.

குருமாணவர் கல்லூரி
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது ஒருநாள் போட்டியில் ஆஸியை மிரட்டியது பங்களாதேஷ்!

டார்வின், செப், 08

கடைசி ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியாவை, மிரட்டும் வகையில் பங்களாதேஷ் பந்து வீச்சில் அசத்தியது. இருப்பினும் துடுப்பாட்டத்தில் சொதப்பியதால் அந்த அணி தோல்வியைச் சந்தித்தது. இதனால் மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் வென்று பங்களாதேஷை வெள்ளையடித்தது அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, ஏற்கனவே அந்த நாட்டு அணிக்கு எதிரான முதல் 2 ஒருநாள் போட்டிகளிலும் படுதோல்வி அடைந்து தொடரை இழந்து விட்டது. இந்த நிலையில் இரண்டு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி டார்வினில் நேற்றுமுன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியத் தற்காலிக கப்டன் மைக்கல் கிளார்க் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். மார்ஸும், வட்சனும் முதல் விக்கெட்டுக்கு 41 ஓட்டங்களைச் சேர்த்து ஓரளவு நல்ல தொடக்கம் அமைத்துக் கொடுத்தனர்.

இதன்பின்னர் பங்களாதேஷ் பந்துவீச்சாளர்கள் அவுஸ்திரேலிய துடுப்பாளர்களை கட்டுப்படுத்தினர். குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர்கள் ஷகிப் அல் ஹசன், அப்துர் ரசாக் ஆகியோரின் சுழலில் சிக்கி, ஓட்டம் எடுக்க முடியாமல் அவுஸ்திரேலிய வீரர்கள் திணறினார்கள்.

அதேபோல் பங்களாதேஷின் தளத் தடுப்பும் அருமையாக இருந்தது. 3 பேரை ரண் அவுட் ஆக்கினார்கள். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் முழுமையாக ஆடிய ஆஸ்திரேலிய அணியால் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 198 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

ஆஸ்திரேலிய அணியில் அதிகபட்சமாக மைக் ஹஸி ஆட்டம் இழக்காமல் 57 ஓட்டங்களும், மார்ஷ் 30 ஓட்டங்களும், வட்சன் 27 ஓட்டங்களும், கப்டன் கிளார்க் 25 ஓட்டங்களும் எடுத்தனர். அல் ஹசன் 10 ஓவர்களில் 25 ஓட்டங்களும், அப்துர் ரசாக் ஒரு விக்கெட் எடுத்து 10 ஓவர்களில் 22 ஓட்டங்களும் மட்டுமே விட்டுக் கொடுத்தனர்.

அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் முழுமையாக ஆடி 200 ஓட்டங்களுக்குக் குறைவாக எடுப்பது இது, 26 ஆவது முறையாகும். மேலும் பங்களாதேஷுக்கு எதிராக அந்த அணியின் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக இது பதிவானது.

சுலபமான இலக்கு என்றாலும் பங்களாதேஷ் அணி துடுப்பாட்டத்தில் சொதப்பியது. தொடக்க ஆட்டக்காரர் தமிம் இக்பால் ஒரு பக்கம் போராட, மறுபுறம் விக்கெட்டுகள் காலியாகின. அவருக்கு யாராவது ஒத்துழைப்புக் கொடுத்திருந்தால் ஆட்டத்தின் போக்கு மாறியிருக்கும். கடைசிவரை போராடிய தமிம் இக்பால் 63 ஓட்டங்கள் (69 பந்து, 5 பவுண்டரி, ஒரு சிக்சர்) குவித்து ஆட்டம் இழந்தார்.

முடிவில் பங்களாதேஷ் அணி 29.5 ஓவர்களில் 125 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று 3 - 0 என்ற கணக்கில் கோப்பையைக் கைப்பற்றியது. அவுஸ்திரேலிய தரப்பில் ஹேஸ்ல்வுட் 3 விக்கெட்டுகளுக்கும், ஸ்டீவர்ட் கிளார்க், வட்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

பங்களாதேஷ் வீரர் தமிம் இக்பால் ஆட்ட நாயகன் விருதையும், தொடர் நாயகன் விருதையும் பெற்றனர். (அ-ஒ)

கார்க்குண்டுத் தாக்குதலில் 30 பேர் பலி!

பாகிஸ்தான் துணைப்படைச் சோதனைச் சாவடிக்கருகில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில், 30 பேர் கொல்லப்பட்டனர். எழுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். உயிரிழந்தோரிலும், காயமுற்றோரிலும் பெரும்பாலோனோர் சிவிலியன்கள் ஆவர் என, பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அதி சக்தி வாய்ந்த இக்குண்டுத்தாக்குதலால், அருகிலுள்ள சந்தைக் கட்டிடமொன்றின் ஒரு பகுதி தகர்ந்து விழுந்து விட்டது. இடிபாடுகளுக்குள் அநேகர் சிக்குண்டிருக்கக் கூடும். மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இக்குண்டுத் தாக்குதலில், மற்றும் பல வாகனங்களும் சேதமடைந்துள்ளன. இத் தாக்குதல் சம்பவம், பாகிஸ்தான் அரசதொலைக் காட்சி சேவையிலும் காட்டப்பட்டது. வாகனங்கள் உடைந்தும் நெளிந்தும் கிடந்தன. மரணித்தோரில் பலரின் சடலங்கள் குருதி வெள்ளத்தில் சிதறிக்கிடந்தன. (அ-ஒ)

பெண்கள் இறுதிப் போட்டியில் செரீனா-ஜெலீனா பலப் பரீட்சை

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிருக்கான ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்ற சேர்பிய வீராங்கனை ஜெலீனா ஜான்கோவிக்கும், அமெரிக்க வீராங்கனை செரினா வில்லியம்ஸும் மோத இருக்கின்றனர்.

இந்த வருடத்தின் கடைசி கிராண்ட் ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிகள் முக்கிய நகரமான நியூயோர்க்கில் நடைபெற்று வருகின்றன. இந்தப் போட்டி தற்போது விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

மகளிருக்கான ஒற்றையர் பிரிவின் அரை இறுதியில் அமெரிக்க முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் மற்றும் சேர்பிய வீராங்கனை ஜெலீனா ஜான்கோவிக் ஆகியோர் முறையே வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

இதில் சேர்பிய விராங்கனை ஜெலீனா ஜான்கோவிக் தனது முழுத் திறனையும் வெளிப்படுத்தி ரஷ்ய வீராங்கனையை திணற வைத்தார். இறுதியில் அவர் 6 - 4, 6 - 4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். பின்பு நடந்த இரண்டாவது அரை இறுதியில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸும் மற்றொரு ரஷ்ய வீராங்கனையான சபினாவும் பலப்பரீட்சை நடத்தினர்.

இதில் 4 ஆம் நிலை வீராங்கனையான செரினா வில்லியம்ஸ் அபாரமாக ஆடி 6 - 3, 6 - 2 என்ற நேர் செட் கணக்கில், ரஷ்ய முன்னணி வீராங்கனையை தோற்கடித்து இறுதிக்கு தகுதி பெற்றார். (அ-ஒ)

தொண்டு அமைப்புக்கள் மீது கட்டுப்பாடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை இலங்கை அரசு நீக்க வேண்டுமென்று ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் வேண்டுகோள் விடுக்க வேண்டுமென மன்னிப்புச்சபை கேட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலையை மிகவும் அவதானமாகப் பரிசீலித்த பின்னர் அந்த நாட்டில் மோசமடைந்து வரும் மனித உரிமைநிலைவரத்தைச் சரிசெய்வதற்குச் சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுப்ப வேண்டுமெனவும் மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

அதன் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மிகவும் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கின்றனர். இவ்வருடம் மே மாதம் முதல் அரசு மேற்கொள்ளும் விமானக் குண்டு வீச்சு மற்றும் ஆட்லறி ஷெல் தாக்குதல் காரணமாக 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தமது வீடுகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

மீபத்தைய மோதலில் சிக்கியுள்ள குடும்பங்கள் ஏற்கனவே பல தடவைகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவையாகக் காணப்படுகின்றன. இதனால் இவர்களுடைய பாதுகாப்பின்மை பல மடங்காக அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெறும் மோதல் காரணமாக பாதுகாப்பு நிலைமை மிக வேகமாக மாறி வருகின்றது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் இடம்பெயர்ந்துள்ளவர்கள் குறித்த உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களை வெளியிடுவதை நிறுத்தியுள்ளது.

வன்னியில் புதிதாக இடம்பெயர்ந்தவர்கள் குறித்த சரியான புள்ளிவிபரங்கள் இல்லாமை, மனித உரிமை நிலைமை மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்து சரியான விபரங்களைப் பெறுவதற்கு சுயாதீன கண்காணிப்புக் குழுவொன்று அவசியம் என்பதை புலப்படுத்தியுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் கடுமையான மற்றும் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களுக்கு உட்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம்கள் தடுப்பு முகாம்களாக.....

விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து வெளியேறிய மக்கள் அரசின் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த முகாம்கள் தடுப்பு முகாம்கள் போல இயங்குகின்றன.

மன்னார் மாவட்டத்தின் கள்ளிமோட்டை முகாமில் கடுமையான அனுமதிப்பத்திர நடைமுறை காணப்படுகின்றது. இதன் காரணமாக 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இராணுவத்திடமிருந்து அனுமதி பெறாமல் வெளியேற முடியாத நிலையிலுள்ளன.

இலங்கையின் இடம்பெயர்ந்த மக்கள் பரந்துபட்ட பொருளாதார, சமூக உரிமை மறுப்பு மற்றும் கடுமையான மீறல்களுக்கு உள்ளாகின்றனர்.

அரசும் விடுதலைப் புலிகளும் விதித்துள்ள கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக புதிதாக இடம்பெயர்ந்தவர்களைச் சென்றடைவதில் மனிதாபிமான அமைப்புகள் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு செல்வதற்கு ஓரளவு சந்தர்ப்பமே வழங்கப்படுகின்றது. மேலும் ஒமந்தையூடாக எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

பொருள்களை எடுத்துச் செல்வது கடும் நடைமுறைக்குள்

சமீபத்தில் மிக மோசமான இடப்பெயர்வைச் சந்தித்துள்ள மக்களுக்காக வன்னிக்குள் பொருள்களை எடுத்துச் செல்வதும் நீண்ட கடுமையான நடைமுறையாக காணப்படுகின்றது.

இரு தரப்பிடமிருந்தும் இதற்கான அனுமதியைப் பெறவேண்டியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கடுமையான நடைமுறைகள் தாமதத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. அனுமதி கிடைத்த பின்னர் சோதனை நடைமுறைகள் மிக நீண்டவையாக உள்ளன.

இதன் காரணமாக பெருமளவு மனிதாபிமானப் பொருள்கள் வவுனியாவிலேயே முடங்கி கிடக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. மேலும் இந்தப் பொருள்களைக் கொண்டு செல்ல மெதுவாக அனுமதி வழங்கப்படுகிறது.

அவசிய உதவி தேவைப்படும் இடங்களுக்கு மனிதாபிமான அமைப்புகள் பல பகுதிகளூடாக சுற்றியே செல்ல வேண்டியுள்ளது. இதனால் மேலதிக நேரமும் எரிபொருளும் தேவைப்படுகின்றது. மேலும் மனிதாபிமான அமைப்புகள் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளேயே பணிபுரிய வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளது.

மனிதாபிமான அமைப்புகள் அனைத்தும் ஒரேமாதிரியாக நடத்தப்படாமல், சில அமைப்புகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதிகப்படியான வாகனங்களைச் சென்றடைவதில் உள்ள பிரச்சினை காரணமாக பல நெருக்கடிகள் உருவாகின்றன.

வன்னியில் மழை காலம் ஆரம்பமாகவுள்ளதால் போதிய தங்குமிடங்கள் இன்மை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பல குடும்பங்கள் திறந்த வெளியிலேயே தங்கியுள்ளன. கூடாரங்கள், சீமெந்து போன்றவற்றைக் கொண்டு செல்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்படுவதாக மனிதாபிமான அமைப்புகள் கூறுகின்றன.

இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவிற்கான உரிமையும் ஆபத்திற்குள்ளாகியுள்ளன. இந்த மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யமுடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

போஷாக்கின்மை சிறு குழந்தைகள் மத்தியில் கடும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அவசியமான ஊட்டச்சத்து உணவுகளைக் கொண்டு செல்வதில் மனிதாபிமான அமைப்புகள் பிரச்சினையை எதிர்கொள்கின்றன.

விடுதலைப் புலிகளின் கடுமையான அனுமதிப்பத்திர நடைமுறை மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதைத் தடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

தேவை

★ வரவேற்பாளர்.
★ தாதி/ தாதிப்பயிலுநர்.
★ மருந்தாளர்/பயிலுநர்.
★ மருத்துவ மாது.

} பெண்கள்

(பதிவு செய்யப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

இடம்:- யாழ்.வைத்தியசாலை. 315, பலாலி வீதி, திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி.

காலம்:- நாளை (09.09.2008) வெள்ளிக்கிழமை

நேரம்:- முற்பகல் 10 மணி

குறிப்பு:- தகுதிச் சான்றிதழுடன் நேரில் வரவும்.

தாதி பயிலுநர்களுக்கு தகுதியான சான்றிதழும் ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படும் - நிர்வாகி.

மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை கனகம்மா

குப்பிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகம்மா நேற்றுக் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2008) திங்கட்கிழமை பி.ப 3மணிக்கு காடாகடம்பை மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குப்பிளான் தெற்கு. இராசன் (மகன்).

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ரேவதி சிவசிதம்பரம் அவர்களின் பாசமிகு தாய்

திருமதி யோகம்மா நடராசா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாலயம்.

கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் சர்வதேச இணைப்பாளரும் பிரதி இயக்குநர்களில் ஒருவருமாகிய சாம் பிரதீபன், மன்ற அங்கத்தவர்களான றெமி ஆனந், ஜீகாந் ஆகியோரின் தந்தையும் மன்றத்தின் அபிமானியுமான

அமரர் சிங்கராஜர் மரியநாயகம் (J.P)

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆறாத்துயரும் அடைந்தோம். அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துநிற்கின்றோம்.

இயக்குநர், அங்கத்தவர்கள்,
திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா தாலிக்குளம் பகுதியில் 5 இளைஞர்கள் சுட்டுக்கொலை

கொழும்பு, செப், 08

வவுனியா மாவட்டத்தில் உள்ள தாலிக்குளம் பகுதியில் கடந்த வெள்ளியன்று படையினர் நடத்திய துப்பாக்கிச் சுட்டில் ஐந்து இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தாலிக்குளம் பாடசாலைக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர்களே படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட இந்த ஐந்து பேரின்து சடலங்களும் வவுனியா வைத்தியசாலையில் சனிக்கிழமை காலை ஒப்படைக்கப் பட்டன. சடலங்கள் தொடர்பான மரண விசாரணையை வவுனியா மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் நடத்தினார்.

கொல்லப்பட்டவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. ஆனால் கொல்லப்பட்ட ஐந்து பேரும் விடுதலைப்புலிகள் என படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (அ-சி)

யாழ்ப்பாணத்திலேயே கடந்த 20 மாதங்களில் அதிக எண்ணிக்கையானோர் கொலை!

கொழும்பு, செப்.8

கடந்த இருபது மாதங்களில் இலங்கை முழுவதிலும் 1,663 கொலைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் அதிக எண்ணிக் கையான 225 கொலைகள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே நிகழ்த்திருக்கின்றன. அதற்கு அடுத்ததாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 189 பேர் கொலை செய்யப் பட்டிருக்கின்றனர்.

இந்தப் புள்ளி விவரத்தை பொலிஸ் தலைமையகம் தெரிவித்திருக்கிறது.

2007ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை 1663 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் இவற்றில் அதிகமானவை வடக்கு-கிழக்கில் இடம் பெற்றுள்ளன எனவும் இலங்கை பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதில் வடக்கில் யாழ்ப்பாணப் பகுதியிலேயே அதிக எண்ணிக்கையில் 255 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் அதற் கடுத்ததாக மட்டக்களப்பில் 189 பேரும் வவுனியாவில் 154 பேரும் கொல்லப்பட் டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்திலேயே குறைந் தளவு கொலைச்சம்பவங்கள் இடம்பெற் றுள்ளன. அங்கு 8 கொலைச் சம்வங்களே இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ள பொலிஸ் தலைமையகம், கம்பளையில் 8 கொலைச் சம்பவங்களும் அம்பாறை மாவட்டத்தில் 88 கொலைச் சம்பவங் களும் இடம்பெற்றுள்ளன என சுட்டிக்காட் டியுள்ளது.

மொத்தமுள்ள 1,1663 கொலைச்சம்ப வங்களில் 324 சம்பவங்களை மட்டுமே பொலிஸாரினால் இனங்காணமுடிந்துள்ள துடன், விசாரணைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன எனவும் பொலிஸ் தலைமைய கம் தெரிவித்தது. (அ-சி)

ஊடகவியலாளரை அச்சுறுத்தியவருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப்.8

ஊடகவியலாளரை அச்சுறுத்திய அரச உத்தியோகத்தர் ஒருவரை பருத்தித்துறை பிரதேச நீதிமன்றம் கடுமையாக எச்சரித்து விடுதலை செய்துள்ளது.

பருத்தித்துறையில் கடந்த வாரம் ஊட கவியலாளர் ஒருவரை யாழ். அரச உத்தி யோகத்தர் ஒருவர், மோட்டார் சைக்கிள் ஒன்றில் வீடு தேடிச் சென்று அச்சுறுத் தினார் என பிரஸ்தாப ஊடகவியலாளர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து பிரஸ்தாப நபருக் கெதிராக பொலிஸார் பருத்தித்துறை நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி கே.அரியநாயகம் முன்னி லையில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்டவரும் முறைப்பாட்டாளரும் பரஸ்பரம் எதிர் காலத்தில் ஒருவ ருக்கொருவர் முரண் பட்டுக் கொள் ளமாட்மோ மென்று மன்றுக்கு உறுதி யளித்தனர். குற் றஞ்சாட்டப்பட்ட வரை கடுமையாக எச்சரித்த நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்தார். (அ)

அரியாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை- அரியாலைப்பகுதியில் நேற்று முன் தினம் பி.ப. 4.45 மணிக்கு ஆளகளுக்கு எதிரான மிதிவெடியில் சிக்கி சிபபாய் ஒருவர் காயமடைந்தார் எனத் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் நேற்றுத் தெரி வித்துள்ளது. (அ-1)

படையினரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு அணிகளும் எதிரெதிரே சந்தித்த சமயம் விடுதலைப்புலிகள் என நினைத்து ஒரு அணிமீது மற்றைய அணி தாக்குதல் நடத்தியது என்றும் - தம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துகின்றனர் என்று நினைத்து அவர்களும் பரஸ்பரம் துப்பாக் கிப்பிரயோகம் செய்தனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பாக படைத்தரப் பில் இருந்து உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் வெளிவரவில்லை. (சி)

விடுதலைப்புலி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு, மாங் குளம் பகுதியில் உள்ள விடுதலைப் புலி களின் பயிற்சித் தளத்தை இலக்குவைத்து விமானப்படையினரின் 'ஜெற்' விமானங் கள் தாக்குதல்களை நடத்தின என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

அதேசமயம், நாச்சிக்குடாப் பகுதியில் கௌதாரிமுனையில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுப் பிற்பகல் 2.10 மணியளவில் விமானப்படையினரின் ஜெற் விமானங் கள் தாக்குதல்களை நடத்தின. அப்பகு தியை நோக்கி முன்நகர்வை மேற்கொள் ளும் படைத்தரப்பின் 58 ஆம் டிவிஷன் அணியினருக்கு உதவியாகவே இத் தாக் குதல் நடத்தப்பட்டது என்றும் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

கிளிநொச்சியைக் கைப்பற்றும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றும் போது அங்கு சுமார் ஐந்து லட்சம் மக்கள் இருந்தனர். யாழ்.குடா நாட்டை கைப்பற்றிய பின்னர் ஒன்றரை வருட காலத்திற்குள் அப்பகுதி மக்களை மீள குடியமர்த்தினோம். கிளிநொச்சியை பொறுத்த மட்டில் யாழ். குடாநாட்டில் இருந்த மக் களை விட அரைவாசிப்பேரே அப்பகுதி யில் உள்ளனர்.

புலிகள் நடத்திய விமானத்தாக்குதலில் எந்தவிதமான இராணுவ முக்கியத்துவமோ பாதிப்போ இல்லை. அவர்களை ஆதரிக் கும் சமூகத்தை ஆசுவாசப்படுத்து வதற்கா கவே புலிகள் திருகோணமலை துறைமு கத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

புலிகள் தேடவைகளே விமானத்தாக்குதல் நடத்தினர்

நாமோ 6,000 தடவைகள் விமானத்தாக்குதல் செய்தோம்

புலிகளின் விமானப்படையினர் இது வரை ஆறு தடவைகள் தாக்குதல்களை நடத்தி உள்ளனர். எமது விமானப்படை யினரோ இக்காலகட்டத்தில் ஆறாயிரம் தடவைகள் விமானத்தாக்குதல் நடத்தி உள்ளனர்.

அவர்களின் விமானங்களில் முப்பது கிலோ எடை உள்ள குண்டை மாத்திரமே கொண்டு செல்லமுடியும். எமது விமானங் களில் 250 கிலோ முதல் ஆயிரம் கிலோ எடை உடைய குண்டுகளை இலகுவாக கொண்டு செல்ல முடியும். புலிகள் இலக் குத் தவறியே குண்டுகளைப் போடுகின் றனர். எமது விமானப் படையினர் குறித்த இலக்கை துல்லியமாக அறிந்து தாக்குதல் நடத்துகின்றனர்-

என்றார் கோத்தபாய.

(அ

புலிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்தரமுல்லயில் உள்ள அவரது கட் சியின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந் துகொண்டு உரையாற்றும்போதே விமல் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

புலிப் பயங்கரவாதத்தை வேரோடு பிடுங்கி வீசும் நோக்கில் இலங்கை அரசு தீவிரமான யுத்தத்தை முன்னெடுத்து வரு கிறது. யுத்தம் வெற்றியை நோக்கியே நகர்ந்துகொண்டு செல்கிறது.

வெற்றியைத் தடுத்து நிறுத்த சில சக்திகள் முயற்சிக்கின்றன. தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினர் இந்த முயற்சியில் முன்னிலையில் உள்ளனர்.

அவர்கள் யுத்தத்தை நிறுத்த இந்தியா சென்று இந்தியாவிட மண்டியிடலாம். ஆனால், ஒருபோதும் யுத்தத்தை நிறுத்த இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக் காது என்று நாம் நம்புகிறோம். புலிகள் அமைப்பு உலகிலேயே மிக மோசமான பயங்கரவாத அமைப்பு என்பதால் இந்தியா நிச்சயம் இவ்வாறான செயற்பாட்டில் ஈடு படாது - என்றார். (சி)

யாழ்.பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைவரங்களை இராணுவத் தளபதி கேட்டறிந்தார்.

குடாநாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலமையை அவதானிப் பதே அவரின் விஜயத்தின் முக்கிய நோக்கம் என்று படைத்தரப்புத் தெரிவித்தது.

அதன் பின்னர் உயிரிழந்த படையினருக்காக அமைக்கப்பட் டுள்ள நினைவுச் சின்னத்தை தளபதி திறந்துவைத்தார்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந் திரசிறி, பலாலி விமான நிலையத் தளபதிவிங்கொமாண் டர் ஏ.ஜே.அமர சிங்க, யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதி பர்டபிள்யூ. எஸ். எச். பொன்னாண்டோ ஆ கி யோ ரு ம் கலந்து கொண் டனர்.

(அ-1)

விமானப்படை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஒரு ரி 56 துப்பாக்கி, ஒரு ரி 56 மகசின், 24 ரவைகள், 10 கிரனேட்டுக்கள், ஒரு கிளை மோர் உட்பட பல ஆயுதவகைகள் மீட்கப்பட் டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(அ-1)

ஐ.நா.மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் உட்படப் பல பிரமுகர்களை யும் சந்தித்த அமைச்சர், இலங்கை யில் மனித உரிமை நிலைவரம் குறித்து விளக்கிக் கூறியிருந்தார்.

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட் டுக்களை மறுத்து அவற்றுக்கான விளக் கங்களையும் எடுத்துக் கூறினார்.

எனினும், அமர்வில் கலந்து கொள் மல் அமைச்சர் கொழும்பு திரும்பிவிட்டார்.

இந்த அமர்வில் இலங்கைக்கு எதிராக பல நாடுகளும் அமைப்புகளும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக குரல் கொடுக்க உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாள ராக நியமனம் பெற்றுள்ள தென்னாபிரிக்க தமிழ்ப் பெண்மணியான நவநீதம் பிள்ளை தலைமையில் இந்த அமர்வு இடம்பெற வுள்ளது. (அ-1-ரி)

கோப்பாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஒரு ரி 56 துப்பாக்கி, ஒரு ரி 56 மகசின், 24 ரவைகள், 10 கிரனேட்டுக்கள், ஒரு கிளை மோர் உட்பட பல ஆயுதவகைகள் மீட்கப்பட் டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(அ-1)

உடன் தேவை

முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு -

பக்க வடிவமைப்பில் பயிற்சி உள்ள ஒருவருடத்துக் குக் குறையாத தொழில் அனுபவம் உள்ள ஆண்கள் பகுதி நேர வேலைக்குத் தேவை.

தமிழில் நல்ல தேர்ச்சியுடையவர்களுக்கும் யாழ். நகரப் பகுதியில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப் படும்.

ஆகப் பிந்தியது 11.09.2008க்கு முன் பூரண சுயவிவரங் களுடனும் அத்தாட்சிப் பத்திரங்களுடனும் விண்ணப் பிக்கவும்.

இலக்கம்:- அ- 20098
மே/பா உதயன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

சிங்கராயர் மரியநாயகம் (J.P)
(ஓய்வு பெற்ற ஊழியர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.)

யாழ்ப்பாணம், குருநகரைப்பிறப்பிடமாக வும் வதிவிடமாகவும் கொண்ட சிங்கராயர் மரிய நாயகம் நேற்று (07.09.2008) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராயர் - மரியப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மக னும், காலஞ்சென்றவர்களான வின்சன் - யோசேப் பினாவின் மருமகனும், காந்திமதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அகஸ்ரின் மற்றும் மொனிக் கம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சுகிர்தகுமாரி, சாம்பிர தீபன், றெமி ஆனந்த், ஜெனிசியாதர்ஷினி, றஜீற் ஜீக்காந்த், சுபாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், றைசன், றஜீவன், றஜன்சன், றெனிசன், அபிநிலுசா, அலன்யொனத்தன், ஆதேஸ் ஆகியோ ரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2008) திங்கட் கிழமை பி.ப. 3.30 மணிக்கு 28, கொண்டடி வீதி, குருநகரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து பூதவுடல் புனித யாகப்பர் ஆலயத் திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக் கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி காந்திமதி
மரியநாயகம் (மனைவி).

28, கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம். T.P. 021 222 3030

(78262)

ENGLISH
Spoken With Grammar
புதிய பிரிவு By:-Britto
ஆரம்பம்:- 10.09.2008 (புதன்)
திங்கள், புதன் வகுப்புகள்
நேரம்:- காலை 10.30 மணி
இடம்:- ரெம்பிள் லேன்
(குழந்தை யேசு ஆச்சிரமத்திற் முன்னால்).

ENGLISH - MEDIUM
6, 7, 8 விஞ்ஞானம், கணிதம், வரலாறு கற் பிக்கக்கூடிய ஆசிரி யர்கள் தேவை. நேரில் வருகை தரவும்.
09.09.2008 - 4-6 p.m. வரை
அடியல் - ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.

G.A.Q [யாழ்.]- 2007 பரீட்சைக்கானது
துரித மீட்டல் கருத்தரங்குத் தொடர்
அனைத்துப் பாடங்களும்
(யாழ். முன்னணி விரிவுரையாளர் குழு)
1Unit- 20 Hours, English- 30 Hours
ஆரம்பம்- 09.09.2008 3p.m.
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்.
ஐடியல்- ஆஸ்பத்திரி பின் வீதி- மானிப்பாய்

A/L 2008 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு
DMI கல்வி நிறுவனமானது, அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கணினி கற்கை நெறிகளுக்கு வீதி கட்டமைச்சலுகையை வழங்குகின்றது.
Diploma in Microsoft Office
Diploma in Computerized Accounting
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip. in Video Production & Multimedia
Tally யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக சம்மாப்பட்டியல் மற்றும் VAT கணக்குகளையும் (Sri Lanka, India & British Style) உள்ளடக்கிய முழுமையான Tally 9 கணக்கீட்டு மென்பொருள் கற்கைநெறி
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 08/09/2008 - 10/09/2008, 14/09/2008 - 15/09/2008
Time 10.00 a.m.
DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. காயத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org